தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**1.04.2013 A.M**

---

விவசாயம் சார்ந்த புதிய பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையத்தில் தொடங்கப்படும் புதிய பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் கீழ் இயங்கும் விவசாயம் மற்றும் கூட்டுறவு துறைப் பயிற்சி நிலையமான, நடேசன் கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையம் ஒரு புதிய பயிற்சியை தொடங்க உள்ளது.

இந்தப் பயிற்சி வரும் ஏப்ரல் 8-ம் தேதி முதல் ஜூலை 8-ம் தேதி வரை நடைபெறவுள்ளது. விவசாயத் துறையில் பட்டம் மற்றும் பட்டயம் பெற்றவர்களுக்கு விவசாயம் சார்ந்த பிரச்னைக்குத் தீர்வு மையமாகவும், விவசாய சம்மந்தப்பட்ட தொழில் தொடங்கவும் உதவி செய்யும் வகையில் இந்தப் பயிற்சி திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதைச் செயல்படுத்த தேவையான நிதி உதவிகளை கிராமிய வங்கிகள் மற்றும் இதர வணிக வங்கிகளிடம் இருந்து பெறுவதற்கு ஆவன செய்யப்படும்.

மேலும் இத்திட்டம் மத்திய அரசின் தேசிய விவசாய, ஊரக வளர்ச்சி வங்கி மற்றும் இந்திய விவசாயத் துறையின் ஒருங்கிணைத்தலின் மூலம் நடக்க இருப்பதால் முழுக்க இலவச அடிப்படையில் நடத்தப்பட உள்ளது.

விருப்பம் உள்ள விண்ணப்பதாரர்கள் இதற்குரிய விண்ணப்பங்களை ஜ்ஜ்ஜ.ய்ண்ஸ்ரீம்ஸ்ரீட்ங்ய்ஹண்.ண்ய் என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்யலாம். விண்ணப்பங்கள் வரும் 3-ம் தேதிக்குள் அனுப்பப்பட வேண்டும்.

**அடர் தீவனம் தயாரித்தல் பயிற்சி**

கொடைக்கானலில் கால்நடை பராமரிப்புத் துறை அட்மா திட்டத்தின் மூலம், விவசாயிகளுக்கு அடர் தீவனம் தயாரித்தல் பயிற்சி முகாம் நடைபெற்றது.

இதில், பல்வேறு வகையான தீவனப் பொருள்களான அரிசி, தவிடு, புண்ணாக்கு, மக்காச் சோளம், கம்பு, உளுந்து, உப்பு மற்றும் தாது உப்புகளைக் கொண்டு எவ்வாறு சரிவிகித அடர் தீவனம் தயாரிப்பது என்பது பற்றிய செயல் விளக்கங்களை கால்நடைத் துறை உதவி இயக்குநர் ஹக்கீம் செய்து காண்பித்தார்.

இந்த முறையை விவசாயிகள் பின்பற்றினால், குறைந்த விலையில் தீவனம்

தயாரிப்பதுடன், பால் உற்பத்தியையும் அதிகரிக்கலாம் என விவசாயிகளுக்கு விளக்கினார்.

இந்தப் பயிற்சி முகாமானது, கொடைக்கானல், அட்டுவம்பட்டி ஆகிய பகுதிகளில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்ட 50-க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு இலவசமாக அடர் தீவனங்களும் வழங்கப்பட்டன.

**சொட்டுநீர் பாசனம்: விவசாயிகளுக்கு பயிற்சி**

சொட்டுநீர் பாசனத்தை பயன்படுத்துவது குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டது.

திண்டுக்கல் வேளாண்மை பொறியியல் துறை சார்பில், தமிழ்நாடு நீர்வள, நிலவள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இப்பயிற்சி வழங்கப்பட்டது.

முகாமில் குறைவான நீரை பயன்படுத்தி, நிறைவான மகசூல் பெறுவது குறித்தும், குறைந்த செலவில் அதிக உற்பத்தி பெறுவதற்கு சொட்டுநீர் பாசனத்தின் அவசியம் குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், சொட்டுநீர் பாசனம் அமைப்பதற்கு சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீதமும், பிற விவசாயிகளுக்கு 75 சதவீதமும் அரசு மானியம் வழங்கி வருவதாகவும், அவற்றை பெறுவதற்கு விவசாயிகள் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்தும் முகாமில் விளக்கம் அளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, சொட்டுநீர்ப் பாசனம் மூலம் பயிரிடப்பட்டுள்ள கரும்பு, வெங்காயம் மற்றும் மழைத்தூவான் அமைத்து சாகுபடி செய்யப்பட்டுள்ள கடலை, வாழைத் தோட்டங்களை நேரில் சென்று விவசாயிகள் பார்வையிட்டனர்.

நிகழ்ச்சியில் திண்டுக்கல் உதவி செயற்பொறியாளர் பெ. ராஜ்மோகன், இளநிலைப் பொறியாளர் எஸ். முனியப்பன், உதவிப் பொறியாளர் கஸ்தூரிபாய் ஆகியோர் விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தனர்.

**பூண்டு, மிளகு சாகுபடி கருத்தரங்கு**

உதகையில் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம் சார்பில் பூண்டு, மிளகு சாகுபடி குறித்த கருத்தரங்கு ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

மாவட்ட தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம் சார்பில் பாக்கு மற்றும் வாசனைப் பயிர்கள் மேம்பாட்டு இயக்ககத்தின் நிதியுதவியுடன் இக்கருத்தரங்கு நடைபெற்றது. தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக நிர்வாகக் குழு உறுப்பினர் கே.ஆர்.அர்ஜுனன் கருத்தரங்கை துவக்கி வைத்து பேசுகையில், நீலகிரி மாவட்டத்தில் வேலையின்மையைக் குறைக்க தோட்டக்கலை வணிகம் குறித்த இரண்டு ஆண்டு தொழிற்படிப்பை உருவாக்க அரசு முயற்சிப்பதாக கூறினார்.

தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத் தலைவர் மற்றும் பேராசிரியர் என்.செல்வராஜ் பேசுகையில், மாவட்டத்தில் அங்கக சாகுபடியில் உற்பத்தி செய்யப்பட்ட பூண்டு, மிளகு பயிருக்கு சர்வதேச வர்த்தக சந்தையில் 60 சதவீதம் வரை கூடுதலாக விலை பெறலாம் என்றார்.

அதைத்தொடர்ந்து தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் மோகன், அரசின் தோட்டக்கலைத் துறை திட்டங்கள் குறித்து விவரித்தார்.

உதகை பகுதியைச் சேர்ந்த பிக்கோல், அதிகரட்டி, கூக்கல்தொரை, முத்தொரை நீர்ப்பிடிப்பு பகுதிகளைச் சேர்ந்த 250-க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர். அதேபோல கூடலூர் பகுதியைச் சேர்ந்த முக்கட்டி ஹள்ளி, பையம்புழா, சாலியார், வைத்திரி, எருமாடு, தேவர்சோலை, தேவாலா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் 500 பேர் பங்கேற்றனர்.

**விவசாயிகளுக்கு மானியத்தில் தெளிப்பு நீர் கருவிகள் வழங்கல்**

கோத்தகிரி தோட்டக்கலைத் துறை சார்பில் விவசாயிகளுக்கு தெளிப்பு நீர் பாசன கருவிகள் 100 சதவீத மானியத்தில் வழங்கப்பட்டன.

தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் நுண் நீர் பாசனத் திட்டத்தின்கீழ் குறு மற்றும் சிறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்தில் தெளிப்பு நீர் பாசனக் கருவிகள் வழங்கும் இந்நிகழ்ச்சி கோத்தகிரி ஊராட்சி ஒன்றிய கூட்ட அரங்கில் சனிக்கிழமை நடைபெற்றது.

ஊராட்சி ஒன்றியத் தலைவர் (பொ) மனோகரன் தலைமையில் தோட்டக்கலை உதவி இயக்குநர் கா.ராஜேந்திரன் கோத்தகிரி வட்டார விவசாயிகளுக்கு ரூ.2 லட்சம் மதிப்புள்ள தெளிப்பு நீர் பாசனக் கருவியை வழங்கினார்.

சிறப்பு விருந்தினர்களாக எம்ஜிஆர் மன்ற ஒன்றிய துணைத் தலைவர் மற்றும் இபிசி நிறுவன பிரதிநிதி மகேஷ்குமார் உள்பட வேளாண்மை அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

துணை வேளாண்மை அலுவலர் பி.ரமேஷ் நன்றி கூறினார்.

**காப்பி வாரிய விழிப்புணர்வு நிகழ்ச்சி**

பந்தலூர் அருகே எருமாடு கிராமத்தில் காப்பி வாரியம் சார்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி சனிக்கிழமை நடைபெற்றது.

எருமாடு தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத்தில் நடைபெற்ற இந் நிகழ்ச்சியில் காப்பி வாரியத்தின் நலத் திட்டங்கள் குறித்தும், வாரியத்தை விவசாயிகள் அணுக வேண்டிய வழிமுறைகள் தொடர்பாகவும் கூடலூர் காப்பி வாரிய முதன்மை விரிவாக்க அலுவலர் நிர்மல் டேவிட் எடுத்துரைத்தார்.

கூட்டுறவு வங்கிச் செயலாளர் வாசு, அரசின் திட்டங்கள் குறித்து விளக்கினார். விவசாயிகள் சங்கத் தலைவர் ராமகிருஷ்ணன் தலைமை வகித்தார்.

**ஆத்மா திட்டத்தில் காலிப்பணியிடம்:5-ல் நேர்முகத் தேர்வுக்கு அழைப்பு**

திருவண்ணாமலை மாவட்டத்தில் செயல்படும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ஆத்மா) திட்ட செயலாக்கத்தில் காலிப் பணியிடங்களுக்கு ஏப்ரல் 5-ம் தேதி நேர்முகத் தேர்வு நடைபெறுகிறது.

இளங்கலை, முதுகலை வேளாண்மை (பிஎஸ்சி அக்ரி, எம்எஸ்சி அக்ரி, பிவிஎஸ்சி, எம்விஎஸ்சி, பிஎஸ்சி (ஹார்ட்), எம்எஸ்சி (ஹார்ட்) படித்த முன் அனுபவம் உள்ளவர்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர்.

இப் பணியிடங்கள் அனைத்தும் தாற்காலிகமானவை. இப்போது காலியாக உள்ள 2 வட்டார தொழில்நுட்ப மேலாளர், 2 வட்டார தொழில்நுட்ப வல்லுநர்களை தேர்வு செய்வதற்கான நேர்முகத் தேர்வு ஏப்ரல் 5-ம் தேதி காலை 10 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறுகிறது.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் பதவிக்கு தொகுப்பூதியமாக மாதம் ரூ.15,000 முதல் 20 ஆயிரம் வரையும், வட்டார தொழில்நுட்ப வல்லுநர் பதவிக்கு தொகுப்பூதியமாக மாதம் ரூ.5 ஆயிரம் முதல் ரூ.8,500 வரையும் வழங்கப்படும்.

தகுதியும், ஆர்வமும் உள்ளவர்கள் அனைத்து அசல் மற்றும் ஜெராக்ஸ் சான்றிதழ்களுடன் நேர்முகத் தேர்வில் பங்கேற்கலாம். மேலும் விவரங்களுக்கு அட்மா திட்ட இயக்குநர் ஆர்.சக்கரவர்த்தியை அணுகலாம் என்றும் மாவட்ட ஆட்சியர் விஜய் பிங்ளே தெரிவித்துள்ளார்.

**லண்டன் செல்லும் தருமபுரி முருங்கைக்காய்!**

லண்டன் வாழ் இந்தியர்களுக்காக தருமபுரி மாவட்டம், மோளையானூரிலிருந்து முருங்கைக்காய் ஏற்றுமதி செய்ய தருமபுரி மாவட்ட வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை உதவியுள்ளது.

தருமபுரி மாவட்டத்தில் தோட்டக்கலைப் பயிர்கள் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகின்றன. குறிப்பாக, மாங்காய், தக்காளி போன்ற பயிர்களை சாகுபடி செய்ய விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டுகின்றன.

இவைமட்டும் அல்லாமல், கத்திரி, பாகல், முருங்கை, வெண்டை உள்ளிட்ட பல வகை காய்கறிகளும் பரவலாக சாகுபடி செய்யப்படுகின்றன. மாவட்டத்தில் தருமபுரி, பாலக்கோடு, மொரப்பூர், பாப்பிரெட்டிப்பட்டி, அரூர், காரிமங்கலம் ஆகிய பகுதிகளில் பலவகை காய்கறிகள் சாகுபடி செய்யப்படுகின்றன.

தருமபுரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் காய்கறிகளுக்கு சில நேரங்களில் நல்ல விலை கிடைக்கும். சில நேரங்களில் உற்பத்தி செலவைக் காட்டிலும் விலை குறைவாக இருக்கும். இதுபோன்ற நிலையில், தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி அருகே உள்ள மோளையானூரைச் சேர்ந்த விவசாயி சாமிகண்ணு (58) தனது 2 ஏக்கர் நிலத்தில் முருங்கை சாகுபடி செய்தார். உற்பத்திப் பொருளுக்கு உரிய விலை கிடைக்கவில்லை என்ற நிலையில், தருமபுரியில் செயல்பட்டு வரும் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் உதவியை நாடினார். அந்தத் துறையின் துணை இயக்குநர் இ.செல்வத்தின் ஆலோசனையின் பேரில், வேளாண் அலுவலர் தாம்சன் உள்ளிட்ட அலுவலர்கள் விவசாயிக்கு உதவ முன்வந்தனர்.

அரசு அலுவலர்களின் ஆலோசனையின் பேரில், மோளையானூரில் விவசாயி சாமிகண்ணு தலைமையில் முருகேசன், சண்முகம், சத்தியம், அருள், குப்பன், கதிரவன், செல்வம் உள்ளிட்ட 10 விவசாயிகள் கொண்ட குழுவை அமைத்தனர். இவர்கள் அந்தப் பகுதியில் 15 ஏக்கர் பரப்பளவில் நவீன தொழில்நுட்பத்துடன் கத்திரி, செடி முருங்கை, பாகல் ஆகியவற்றை சாகுபடி செய்தனர். மேலும், ஏற்றுமதிக்கான காய்கறிகளை தரம் பிரிக்கும் தொழில்நுட்பம் குறித்து விழிப்புணர்வை வேளாண் அலுவலர்களிடமிருந்து விவசாயிகள் பெற்றனர்.

இதைத் தொடர்ந்து, வேளாண் அலுவலர்கள், விவசாயிகளுக்கு உதவும் வகையில் வெளிநாட்டு இந்தியர்கள் உண்ணும் காய்களை ஏற்றுமதி செய்யும், கோவையைச் சேர்ந்த வெளிநாட்டு ஏற்றுமதியாளரை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தினர்.

அந்த தனியார் ஏற்றுமதி நிறுவனம் விவசாயிகளிடம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டு தற்போது லண்டன் வாழ் இந்தியர்களுக்கு முருங்கைக்காய்களை ஏற்றுமதி செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்மூலம் விவசாயிகளுக்கு ஆண்டு முழுவதும் உள்ளூர் சந்தையைவிடக் கூடுதலாக விலை கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

சிங்கப்பூர், துபை, மலேசியா போன்ற வெளிநாடுகளுக்கு ஏற்கெனவே தருமபுரி மாவட்டம், பாலக்கோடு பகுதியிலிருந்து வாழைப்பழம், தக்காளி, குடைமிளகாய், கத்திரி, அவரை போன்ற காய்கறிகள் ஏற்றுமதி செய்யப்படும் நிலையில், மோளையானூரிலிருந்து லண்டனுக்கு முருங்கைக்காய் ஏற்றுமதி செய்ய ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

இது தருமபுரி மாவட்டத்தில் தற்போது விவசாயத்தை பலரும் கைவிடும் நிலையில், வெளிநாடுகளுக்கு காய்கறிகளை ஏற்றுமதி செய்வதன் மூலம் விவசாயம் குறித்த நம்பிக்கை ஒளியை விவசாயிகளிடையே ஏற்படுத்தி உள்ளது.

## 24,150 கறவை மாடுகளுக்கு மானிய விலையில் தீவனம், தாது உப்பு கலவை வழங்கப்பட உள்ளது

அரியலூர் மாவட்டத்தில் 24,150 கறவை மாடுகளுக்கு மானிய விலையில் தீவனம் மற்றம் தாது உப்பு கலவை வழங்கப்பட்ட உள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் எம்.ரவிக்குமார்.

அரியலூர் மாவட்டம், திருமானூர் ஊராட்சி ஒன்றியம், கீழப்பழூர் ஊராட்சியில் உள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் மானிய விலையில் கால்நடை தீவனம் மற்றும் தாது உப்பு கலவை வழங்கும் விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

விழாவில், விவசாயிகளுக்கு மானிய விலையில் கால்நடை தீவனம் வழங்கிய ஆட்சியர் மேலும் பேசியது:

காவிரி டெல்டா மாவட்டகளான அரியலூர், திருச்சி, கரூர், புத்க்கோட்டை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், கடலூர் ஆகிய மாவட்டங்களிலுள்ள பால் உற்பத்தியாளர்களுக்கு, பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் மூலம் மானிய விலையில் கால்நடைத் தீவனம் மற்றும் தாது

உப்பு கலவை வழங்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இதற்காக தமிழக அரசால் கால்நடைத் தீவனத்திற்கு ரூ. 11.62 கோடியும், தாது உப்பு கலவைக்கு ரூ. 3.38 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம், அரியலூர் மாவட்டத்தில் 110 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்திற்கு பால் வழங்கி வரும் 10,936 உறுப்பினர்கள் பயனடைவார்கள். 24,150 கறவை மாடுகளுக்கு தீவனம் மற்றம் தாது உப்பு கலவை மானிய விலையில் வழங்கப்பட உள்ளது.

அரியலூர் மாவட்டத்திற்கு கால்நடைத் தீவன மானியத் தொகையாக நாள் ஒன்றுக்கு ரூ. 96,600, தாது உப்பு கலவை மானியத் தொகையாக ரூ. 30,200 என வழங்கட உள்ளது. மாவட்டத்தில் உள்ள 110 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் மூலம் நாள்தோறும் 62 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டடு, சென்னைக்கு 30 ஆயிரம் லிட்டர் பால் குளிருட்டும் நிலையம் மூலம் அனுப்பி வைக்கப்படுகிறது. எனவே, பொதுமக்கள் அனைவரும் மானிய விலையில் வழங்கப்படும் தீவனம் மற்றும் தாது உப்பு கலவைகளை பெற்று கால்நடைகளை முறையாக பராமரித்து இரண்டாம் பசுமை புரட்சியை ஏற்படுத்த வேண்டும் என்றார் ஆட்சியர் ரவிக்குமார்.

விழாவில், மாநிலங்களவை உறுப்பினர் ஆ.இளவரசன், அரியலூர் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் துரை.மணிவேல், திருமானூர் ஒன்றியக்குழு தலைவர் சீனிவாசன், துணைத்தலைவர் குமரவேல், கீழப்பழூர் ஊராட்சி தலைவர் அரிசந்திரன், மேலாளர் அன்பழகன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

துணை பதிவாளர் (பால்வளம்) கஸ்தூரிபாய் வரவேற்றார். பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க செயலர் பாஸ்கர் நன்றி கூறினார்.

## புதுக்கோட்டை மாவட்டத்தில் மானிய விலையில் மாட்டுத் தீவனம்பு

புதுக்கோட்டை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள், கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு மானிய விலையில் கால்நடை தீவனம் வழங்கும் திட்டம் சனிக்கிழமை தொடக்கி வைக்கப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஒன்றியம், காவேரி நகரில் நடைபெற்ற விழாவில், மானிய விலையில் கால்நடை தீவனம் வழங்கும் திட்டத்தை ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் ந. சுப்பிரமணியன் தொடக்கி வைத்து பேசியது:

வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் கால்நடைகளுக்கு மானிய விலையில் தீவனம் வழங்கும் திட்டத்தின் கீழ் காவிரி டெல்டா மாவட்டங்களில் உள்ள பால் உற்பத்தியாளர்களுக்கு மானிய விலையில் கால்நடை தீவனம் வழங்க ரூ.15 கோடியை தமிழக முதல்வர் ஒதுக்கீடு செய்துள்ளார். அதில், புதுக்கோட்டை மாவட்டத்துக்கு ரூ. 4.8 லட்சம் மானியம் கிடைத்துள்ளதால் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் கறவை செய்யும் உறுப்பினர்களின் கால்நடைகளுக்கு மானிய விலையில் கால்நடை தீவனம் மற்றும் தாது உப்புக்கலவை ஆகியவை பெற முடியும்.

கிராம பால் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் தரும் பால் லிட்டர் ஒன்றுக்கு 500 கிராம் வீதம் அதிக பட்சம் ஒரு கிலோ வரை பால் உற்பத்திக்கு தகுந்தவாறு நாளொன்றுக்கு ஒரு கிலோவுக்கு ரூ.4 மானியமாக வழங்கப்படுகிறது. இதே போல் தாது உப்புக்கலவை பால் கறவை செய்யும் உறுப்பினர்களுக்கு நாள் ஒன்றுக்கு 20 கிராம் 50 சத மானிய விலையில் வழங்கப்படும். நமது மாவட்டத்திலுள்ள 138 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் பால் கறவை செய்யும் 4,101 உறுப்பினர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைவர். இத்திட்டத்தின் கீழ் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு 120 டன் கால்நடை தீவனமும், 2.5 டன் தாது உப்புக்கலவையும் மானிய விலையில் வழங்கப்படும் என்றார் அமைச்சர்.

நாள் ஒன்றுக்கு 16,846 லிட்டர் பால் உற்பத்தி:

நமது மாவட்டத்தில் 138 பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் பால், சிவகங்கை மற்றும் திருச்சி ஒன்றியங்களுக்கு 12 பால் சேகரிக்கும் வழித்தடங்கள் வாயிலாக கொள்முதல் செய்யப்பட்டு நாள் ஒன்றுக்கு சராசரியாக 16,846 லிட்டர் பால் அனுப்பப்பட்டு வருகின்றது.

மேலும் பால்விற்பனையை பெருக்க உத்தேசமாக கந்தர்வக்கோட்டை, விராலிமலை ஆகிய இடங்களில் பால் வினியோகத்தடங்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த மானிய தீவன திட்டத்தின் கீழ் நமது மாவட்டத்தில் செயல்படாமல் உள்ள பால் குளிரூட்டும் நிலையத்தை புத்தாக்கம் செய்து பால்பண்ணையாக மாற்றம் செய்வதற்கு மத்திய அரசால் ரூ.2.99 கோடி நிதி ஒதுக்கப்பட்டு தற்போது கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் அடுத்த மூன்று மாதங்களில் முடிக்கப்பட்டு பால்பண்ணையை தொடங்க நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றார்.

இதில், புதுக்கோட்டை ஆவின் பொதுமேலாளர் செல்வராஜ், கோட்டாட்சியர் சி. முத்துமாரி, மாவட்ட ஊராட்சித்தலைவர் வி.சி. ராமையா, ஊராட்சி மன்றத்தலைவர்கள் முத்தையா, தங்கையா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### மேட்டூர் அணை நீர்மட்டம்: 27.40 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 27.40 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 56 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 496 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை

### விவசாயம் சார்ந்த அனைத்து தொழிலாளர்களும் உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் பயன் பெறலாம்'

விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த அனைத்து தொழில்களிலும் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் தமிழக முதல்வரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பயன் பெறலாம் என மாவட்ட ஆட்சியர் சி.சமயமூர்த்தி தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

தமிழக முதல்வரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்படி விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள குறு, சிறு விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் 10.9.2011 முதல் அல்படுத்தப்பட்டு வருகிறது. 2.50 ஏக்கருக்கு மேற்படாத நன்செய் நிலம் அல்லது 5 ஏக்கருக்கு மேற்படாத புன்செய் நிலம் சொந்தமாக வைத்திருந்து அந்த நிலத்தில் நேரடியாக பயிர் செய்யும் 18 வயது முதல் 65 வயது வரையுள்ள அனைத்து குறு, சிறு விவசாயிகள் மற்றும் விவசாயம் சார்ந்த தொழிலில் ஊதியத்திற்காவோ அல்லது குத்தகை அடிப்படையிலோ ஈடுபட்டுள்ள அனைத்து குத்தகைதாரர்கள் மற்றும் தொழிலாளர்கள் இந்தத் திட்டத்தின் கீழ் மூல உறுப்பினர்களாகப் பதிவு பெற தகுதி உடையவர்களாவர். மேலும், அவர்களைச் சார்ந்து வாழும் குடும்ப உறுப்பினர்களும் இத்திட்டத்தின் கீழ் உறுப்பினராகப் பதிவு செய்யத் தகுதியானவர்கள். தோட்டக்கலை, பட்டுப்புழு வளர்ப்பு, பயிர் வளர்த்தல், புல் மற்றும் தோட்ட விளைபொருள் விளைவித்தல், பால்பண்ணை தொழில், மேய்ச்சல் தொழில், கோழிப்பண்ணை, உள்ளூர் மீன்பிடித் தொழில், கால்நடை வளர்ப்பு ஆகிய தொழில்களும் இந்த திட்டத்தின்படி விவசாயம் சார்ந்த தொழில்கள் என்று கருதப்படும்.

இத்திட்டத்தின் படி பயனாளிகளுக்கு ஐ.டி.ஐ., பாலிடெக்னிக், பட்டயப்படிப்பு, இளநிலை பட்டப்படிப்பு, முதுநிலை பட்டப்படிப்பு, இளநிலை மற்றும் முதுநிலை தொழில் படிப்புகளுக்கு குறைந்தபட்சம் ரூ. 1250 முதல் ரூ. 6750 வரை கல்வி உதவித் தொகை வழங்கப்படும்.

திருமண உதவித் தொகையாக ஆண்களுக்கு ரூ. 8 ஆயிரம், பெண்களுக்கு ரூ. 10 ஆயிரம், முதியோர் உதவித் தொகை மாதம் ரூ. 1000, காசநோய், எயிட்ஸ், புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாதாந்திர பராமரிப்பு உதவி ரூ. 1000, விபத்து மரண உதவித் தொகை ரூ.1 லட்சம், விபத்தில் இரண்டு கைகள், இரண்டு கால்கள், ஒரு கை ஒரு கால் இழப்பு மற்றும் மீட்க முடியாத அளவுக்கு கண்கண் பாதிப்பு ஆகியவற்றுக்கும் ரூ.1 லட்சம் வழங்கப்படும்.

மேலும், ஒரு கை அல்லது ஒரு கால் இழந்தால், பக்கவாதம் ஏற்பட்டால் ரூ.50 ஆயிரம், படுகாயம் மூலம் கைகள் கைகள், கால்கள் பாதிக்கப்பட்டால் ரூ.20 ஆயிரம், இயற்கை மரணத்துக்கு ரூ.10 ஆயிரம், ஈமச்சடங்கு செலவு ரூ.2500 ஆகிய பல்வேறு உதவித் தொகைகள் இந்த திட்ட பயனாளிகளுக்கு வழங்கப்படும். இந்தத் திட்டங்கள் அனைத்தும் மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்ட அளவிலான சமூக பாதுகாப்புத் திட்ட வட்டாட்சியர்கள் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

எனவே, விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள குறு, சிறு விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் முதல்வரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்படி நலத்திட்ட உதவிகளை பெற்று பயனடையுமாறு கேட்டுக் கொண்டுள்ளார் ஆட்சியர்.

இன்றைய வேளாண் செய்திகள்
1.04.2013 A.M

## கோதுமை கொள்முதல் அதிகரிக்கும் வாய்ப்பு



சண்டிகார்: நடப்பு 2013–14ல் பஞ்சாப் மற்றும் அரியானா மாநிலங்களின் மொத்த கோதுமை கொள்முதல் 5 சதவீதம் உயர்ந்து 2.27 கோடி டன்னாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதில், பஞ்சாப் மாநிலத்தில் மட்டும் இதுவரை இல்லாத அளவிற்கு அதிகபட்சமாக 1.40 கோடி டன் கோதுமை கொள்முதல் செய்யப்பட வாய்ப்புள்ளது. சென்ற பருவத்தில் 1.28 கோடி டன்னாக இருந்தது என இந்திய உணவு கழகம் தெரிவித்துள்ளது. அரியானா மாநிலத்தில் 87.30 லட்சம் டன் கோதுமை கொள்முதல் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இங்கு, சென்ற ஆண்டில் 87.16 லட்சம் டன் கொள்முதல் செய்யப்பட்டது. பஞ்சாப் மற்றும் அரியானா மாநிலங்களில் கோதுமை உற்பத்தி முறையே 1.62 கோடி டன் மற்றும் 1.23 கோடி டன்னாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தமிழகத்திற்கு நிதி ஒதுக்குவதில் மத்திய அரசு அநீதி:உணவு பதப்படுத்தும் துறையில்...



உணவு பதப்படுத்தும் மையங்களை நவீனமயமாக்க, இதர மாநிலங்களை விட, மிகக் குறைவான நிதியை, தமிழகத்துக்கு மத்திய அரசு ஒதுக்கியுள்ளது.உணவுப் பொருட்களை பாதுகாக்கவும், கழிவுகளைக் குறைத்து, நல்ல முறையில் அவற்றை பதப்படுத்துவதற்காகவும், நாடு முழுவதும், பல்வேறு மையங்கள் மத்திய அரசால் இயக்கப்படுகின்றன.

நவீனமயம்:இந்த மையங்களை, நவீனப்படுத்த முடிவு செய்யப்பட்டு, அதற்கு ஏற்ற வகையிலான நடவடிக்கைகளை, மத்திய விவசாய அமைச்சகம் மேற்கொண்டு வருகிறது.அதன்படி, உணவு பதப்படுத்தும் துறையில், புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவது, தற்போதுள்ள மையங்களை, மேலும் மேம்படுத்தி, நவீனமயமாக்குவது போன்ற நடவடிக்கைகளுக்காக, மத்திய அரசின் சார்பில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.இதற்கென சிறப்பு திட்டம் ஒன்று தீட்டப்பட்டு, அதன் வாயிலாக, மாநில வாரியாக நிதி அளிக்கப்பட்டுள்ளது.

கடந்த, பிப்ரவரி மாதம், 13ம் தேதி வரையில், எல்லா மாநிலங்களுக்கும் இந்த திட்டத்தின் வாயிலாக நிதி வழங்கப்பட்டுள்ளது. இந்த தகவல்களை, டில்லியில் விவசாய அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.இதில், வளர்ச்சியடைந்த மாநிலங்கள் என்று பார்த்தால், முதல் 10 மாநிலங்களில், தமிழகம் எட்டாவது இடத்தில் தான் உள்ளது. மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டால், மிகக் குறைவான நிதியை, தமிழகம் பெற்றுள்ளது.ஆந்திரா, குஜராத், மகாராஷ்டிரா என, வளர்ச்சியடைந்த மாநிலங்கள் வரிசையில் உள்ள தமிழகம், உணவு பதப்படுத்தும் துறையில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது.

இதற்கு காரணம், உணவு பதப்படுத்தும் துறையில் தமிழகம் போதிய கவனம் செலுத்தவில்லையா அல்லது மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு குறைவாக உள்ளதால், இந்நிலை ஏற்பட்டுள்ளதா என்பது தெரியவில்லை.மற்ற மாநிலங்களைக் காட்டிலும், மிக அதிகபட்சமாக ஆந்திராவிற்கு தான், அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.பஞ்சாப் :இந்த திட்டத்திற்காக, 33.74 கோடி ரூபாய், ஆந்திராவிற்கு மத்திய அரசு வழங்கியுள்ளது. அடுத்த இடத்தை, பஞ்சாப் பெற்றுள்ளது. இம்மாநிலம், உணவு பதப்படுத்தும் துறைக்கு என, 17.19 கோடி ரூபாயைப் பெற்றுள்ளது.அடுத்ததாக, மகாராஷ்டிர மாநிலம், 14.57 கோடி ரூபாய் வரை பெற்றுள்ளது. சத்தீஸ்கர் மாநிலத்திற்கு, 13.30 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

சட்டசபை தேர்தல் நடைபெறஉள்ள கர்நாடக மாநிலத்திற்கு, 10.20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.ஆறாவது இடத்தில், அரியானா உள்ளது. இம்மாநிலத்திற்கு, 9.31 கோடி ரூபாய் கிடைத்துள்ளது.குஜராத் :அடுத்ததாக, குஜராத் மாநிலம், 7.20 கோடி ரூபாய் வரை பெற்றுள்ளது. எட்டாவது இடத்தில் உள்ள, தமிழகத்துக்கு, 6.16 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. உத்தர பிரதேசத்திற்கு, 5.74 கோடி ரூபாயும், ராஜஸ்தானுக்கு 5.23 கோடி

ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டு ள்ளன.சிறப்பு திட்டம் தீட்டப்பட்டு, உணவு பதப்படுத்தும் துறையை சீரமைக்கும் நோக்கில், நாடு முழுவதும் உள்ள, 966 மையங்கள் கண்டறியப்பட்டு, அவற்றை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.இந்த மையங்கள் அனைத்துக்கும், மொத்தமாக 145.74 கோடி ரூபாய் வரை, மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளதாக தெரியவந்து உள்ளது.

**பயறு சாகுபடியில் கூடுதல் மகசூல் விதை பரிசோதனை அவசியம்**

காஞ்சிபுரம்:"பயறு வகைப் பயிர்களை சாகுபடி செய்யும் விவசாயிகள், விதைப் பரிசோதனை செய்வது அவசியம்' என, காஞ்சிபுரம் விதைப் பரிசோதனை அலுவலர் பெருமாள் தெரிவித்துள்ளார்.அவரது அறிக்கை:காஞ்சிபுரம் மாவட்டத்தில், சித்திரை பட்டத்தில், கோடை பயிர்களாக, உளுந்து, பச்சை பயறு, காராமணி போன்றவற்றை சாகுபடி செய்வது வழக்கம். நீர் பற்றாக்குறை உள்ள கோடைக் காலத்தில், குறைவாக நீர் தேவைப்படும் பயறு வகைப் பயிர்களை சாகுபடி செய்வதன் மூலம், அதிக வருமானம் பெறலாம்.பயறு வகைப் பயிர்களை பொறுத்தவரையில், பயன்படுத்தப்படும் விதைகளுக்கு, குறைந்தபட்சம், 75 சதவீதம் முளைப்புத் திறன் இருப்பது அவசியம். இவ்விதைகளை, பயன்படுத்தும்போது, உளுந்து, பச்சைப்பயறு, போன்ற பயிர்களுக்குரிய இடைவெளியான, 30க்கு10 செ.மீ., என்பது நிச்சயம் பராமரிக்கப்படும். இதன் மூலம் ஹெக்டேருக்கு, 3.25 லட்சம் செடிகள் என்ற பயிர் எண்ணிக்கையை பராமரிப்பது எளிதாகும். இதில், சராசரி மகசூலை விட, 20 சதவீதம் அதிக மகசூல் பெறலாம்.எனவே, விதைகளை விதைப்பதற்கு முன்பாக, விதைப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். கோடை பயறு வகைப் பயிர்களை சாகுபடி செய்யும் விவசாயிகள், தங்களிடம் உள்ள அல்லது தாங்கள் விதைப்பதற்காக வாங்கியுள்ள விதையிலிருந்து, 100 கிராம் விதை எடுத்து, விதைப் பரிசோதனை அலுவலர், விதைப் பரிசோதனை நிலையம், காஞ்சிபுரம், என்ற முகவரிக்கு, தங்களுடைய முழு முகவரி மற்றும் பரிசோதனைக் கட்டணமாக, 30 ரூபாயை நேரடியாகவோ, தபால் மூலமாகவோ அனுப்பி வைத்து, பரிசோதனை முடிவுகளை பெற்றுக் கொள்ளலாம்.இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கண்டமானடியில் மண் பரிசோதனை**

விழுப்புரம்:கண்டமானடியில் இலவச மண் பரிசோதனை முகாம் நடந்தது.
தூத்துக்குடி ஸ்பிக் உர நிறுவனம் சார்பில், கண்ட மானடி, அரியலூர் கிராமங்களில் உழவர் மன்றம் மூலம் மண் பரிசோதனை முகாம் நடந்தது. உழவர் மன்ற தலைவர் ராதாகிருஷ்ணன் தலைமை தாங்கினார். ஊராட்சி தலைவர்கள் பிருந்தா, சேட்டு முன்னிலை வகித்தனர். முகாமில்,

ஸ்பிக் நிறுவன கள அலு வலர் குழந்தைவடிவேல், மண் வேதிகர் ராஜகுரு ஆகியோர் விவசாய மண் மாதிரிகளை இலவசமாக ஆய்வு செய்து, பரிசோதனை சான்று வழங்கினர்.

**கால்நடை தீவன பயிருக்கு மானியம்**

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், வறட்சியை சமாளித்து கால்நடை தீவனங்கள் சாகுபடி செய்ய மானியம் வழங்கப்படுகிறது.
கலெக்டர் ராஜேஷ் வெளியிட்ட அறிக்கை:
தமிழகத்தில் இரண்டாவது வெண்மை புரட்சியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் தமிழக முதல்வர் விலையில்லா கறவைப்பசுக்களை ஏழை எளிய விவசாயிகளுக்கு வழங்கி வருகிறார்.
கால்நடைகளின் உற்பத்தியியை அதிகரிக்க பசும் தீவனம் இன்றியாமையாது.
பசுந்தீவனம் கால்நடைகளுக்கு குறைவில்லாமல் கிடைக்கும் நோக்கத்துடன் தமிழக முதல்வரால் கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கடந்தாண்டு, 400 ஏக்கரில் அதிக மகசூல் தரக்கூடிய கோ 3, கோ4 ஆகிய ரக பசுந்தீவனங்களை சாகுபடி செய்ய அறிவிக்கப்பட்டு, 100 சதவீத மானியத்தில் திட்டம் செயல்படுத்தப்பட்டது.
வரும் கோடைகாலத்தில் வறட்சியை சமாளிக்கும் விதமாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கூடுதலாக, 150 ஏக்கரில், 100 சதவீத மானியத்தில் தீவன சோளம் மற்றும் தட்டைபயிறு போன்ற ரகங்களை சாகுபடி செய்ய திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின் கீழ் கால் ஏக்கரில் தீவன சோளம் மற்றும் தீவன தட்டை பயிறு போன்ற ரகங்களை சாகுபடி செய்ய, 100 சதவீத மானியமாக, 2 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது.
இத்திட்டத்தின் கீழ் பயன் பெற விரும்பும் விவசாயிகள் அருகில் உள்ள கால்நடை மருந்தக கால்நடை உதவி மருத்துவரை அணுகி விண்ணப்பிக்கலாம்.

**விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்**

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்ட வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில், காவேரிப்பட்டணம் அடுத்த பன்னிஅள்ளி புதூரில், ஊரக வணிக மையம் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் நடந்தது. ரவி தலைமை வகித்தார். வேளாண் துணை இயக்குனர் பூபதி, உதவி வேளாண் அலுவலர்கள் சுரேஷ், நாகராஜன் ஆகியோர், விளைபொருள் குழுவின் முக்கியத்துவம், மா அறுவடை செய்யும் முறை, சுத்தம் செய்தல், தரம் பிரித்தல், சேமித்து வைத்தல், சந்தை விலை விபரம் அறிதல், விளைபொருள் குழு மூலம் நல்ல விலைக்கு விற்பனை செய்வது குறித்து விளக்கினர். வேளாண் விற்பனை குறித்த தொழில் நுட்பங்களை பெற கிருஷ்ணகிரி ஒழுங்கு முறை விற்பனை வளாகத்தில் உள்ள வேளாண் துணை இயக்குனர் அலுவலகத்தை அணுகுமாறு விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. மா விளைபொருள் குழுவினை சேர்ந்த விவசாயிகள் மற்றும் இதர விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

**மஞ்சளுக்கான விலை திடீர் அதிகரிப்பு அறுவடை பணியில் விவசாயிகள் தீவிரம்**

சத்தியமங்கலம்: மஞ்சளுக்கு திடீரென விலை அதிகரித்துள்ளதால் மஞ்சள் அறுவடை பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

கடந்த, 2010ல் மஞ்சள் ஒரு குவிண்டால், 16 ஆயிரம் ரூபாய் வரை விற்பனையானது. இது வரலாற்று சாதனையாகும். இதனால் மாற்று பயிர் நடவு செய்த விவசாயிகள் கூட, கடந்த இரு ஆண்டாக மஞ்சள் பயிரிட்டனர். இதுவரை இல்லாத அளவு, கடந்த ஆண்டு மஞ்சள், 76 சதவீதம் பயிரிடப்பட்டிருந்தது.

தொடர்ந்து மஞ்சள் விலை அதிகரிக்கும் என்ற எண்ணத்தில், கடந்த ஆண்டு மஞ்சள் பயிரிட்ட விவசாயிகளுக்கு இரு விதத்தில் பாதிப்பு ஏற்பட்டது. மஞ்சள் பயிருக்கு கடுமையான நோய் தாக்கி, விளைச்சல் பாதிக்கப்பட்டது. மறுபுறம், சில இடங்களில் விளைந்த மஞ்சளை அறுவடை செய்யும் கூலி கிடைக்காது என்பதால், நிலத்திலேயே மஞ்சளை விட்ட விவாயிகளும் உள்ளனர்.

அடுத்து, ஒரு குவிண்டால் மஞ்சள், 16 ஆயிரத்துக்கு விற்ற நிலை மாறி, ஒரு குவிண்டால் மஞ்சள், 2,500 ரூபாய்க்கு விற்பனையாகியது. இதனால் கடந்த ஆண்டு மஞ்சள் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். நடப்பு ஆண்டில் கடந்த ஆண்டை காட்டிலும், மஞ்சள் பயிரிட்டுள்ள விவசாயிகளின் எண்ணிக்கை குறைவாக இருந்தது.

இந்தாண்டு துவக்கத்தில் ஒரு குவிண்டால் மஞ்சள், 5,000 ரூபாய் வரை விற்பனையானதால், விவசாயிகள் மஞ்சள் அறுவடை செய்வதில் விவசாயிகளிடையே மந்த நிலை காணப்பட்டது. இந்நிலையில் கடந்த வாரம், ஈரோடு மஞ்சள் மார்கெட்டில் ஒரு குவிண்டால் மஞ்சள், 9,000 முதல், 11,000 ரூபாய் வரை விற்பனையானது. மஞ்சளின் இந்த திடீர் விலையேற்றம், மஞ்சள் பயிரிட்ட விவசாயிகளை வேகப்படுத்தியுள்ளது.

மஞ்சள் விலை மீண்டும் குறைவதற்குள், மஞ்சளை அறுவடை செய்து விற்பனை செய்துவிட வேண்டும் என்ற நோக்கத்தில், சத்தியமங்கலம் பகுதியில் மஞ்சள் அறுவடையில் விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர்.

**இறைச்சிக்காக...தீவனம் கிடைக்காததால் கேரளாவுக்கு பயணிக்கும் கரூர் மாவட்ட கால்நடை**

கரூர்: பருவமழை தவறிய காரணத்தால் கரூர் மாவட்டத்தில் பல லட்சம் கால்நடைகளுக்கு தீவனம் கிடைப்பதில் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனால், கரூர் மாவட்டத்தில் இரு ந்து மாடுகளை, கேரளாவுக்கு இறைச்சிக்காக அனுப்பபடும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.காவிரியாறு மற்றும் அமராவதி ஆற்றுப்பகுதிகளை கொண்டது கரூர் மாவட்டம். கரூர் நகரப்பகுதியை தவிர, மாவட்டத் தின் அனைத்து பகுதிகளிலும் விவசாயமே முதன்மையானதாக உள்ளது.குறிப்பாக, வேலாயுதம்பாளையம் பகுதியில் வெற்றிலை சாகுபடி, குளித்தலை, கிருஷ்ணராயபுரம் பகுதியில் வாழை, பூக்கள் சாகுபடி, அரவக்குறிச்சியில் முருங்கை சாகுபடி ஆகியவை நடந்து வருகிறது. மாவட்டத்தின் பெரும் பகுதிகளில் விவசாயிகள், கால் நடைகளை வளர்ப்பு தொழிலிலும்

ஈடுப்பட்டு வருகின்றனர்.கடந்தாண்டு வடகிழக்கு பருவமழை மற்றும் தென்மேற்கு பருவமழை எதிர்பார்த்த அளவில், கரூர் மாவட்டத்தில் பெய்யவில்லை. குறிப்பாக, கரூர் மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவான 652.20 மி.மீ., மழையை விட குறை வாக 52 7.70 மி.மீ., மழைதான் பெய்தது.அமராவதி ஆற்றில் தண்ணீர் திறக்கப்படாத நிலையில், காவிரியாற்றில் குடிநீருக்காக மட்டும் தண்ணீர் திறக்கப்பட்டது. இதனால், உணவு தானியங்கள் மட்டுமன்றி, கால்நடைகளுக்கு தேவையான பயிர்களை கூட சாகுபடி செய்வதில் சிக்கல் ஏற்பட்டது. இதனால், கால்நடைகளுக்கு போதிய தீவனம் கிடைக்கவில்லை.குறிப்பாக, விவசாயிகள் கால்நடைகளுக்கு தேவையான கடலைக்கொடி மற்றும் சோளத்தட்டுகள் மூன்று மாதங்களுக்கு இருப்பு வைப்பது வழக்கம். கடந்த ஏப்ரல் மாதத்தில் பெய்யும், "கார்மழை' என்றழைக்கப்படும் பருவமழை பெய்யாமல் பொய்த்து விட்டதால், கால்நடைகளுக்கு தற்போது தீவன தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.இதனால், கரூர் மாவட்டத்தில் உள்ள ஆடு, மாடு உள்ளிட்ட லட்சக்கணக்கான கால்நடைகளுக்கு வெளி மாவட்டத்தில் இருந்து, விலை கொடுத்து தீவனம் வாங்க வேண்டிய அவல நிலையுள்ளது. கடந்தாண்டு ஒரு விசுவு என்ற அளவு கொண்ட சோளத்தட்டுக்கு 300 ரூபாய் விற்றது. தற்போது 1,000 ரூபாய் வரை விலை ஏறியுள்ளது. இதனால், பல விவசாயிகள் கால்நடைகளை குறைந்த விலைக்கு விற்கும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.குறிப்பாக, நாள்தோறும் கரூர் மாவட்டத்தில் இருந்து கேரளாவுக்கு மாடுகள், ஆடுகள் இறைச்சிகாக லாரி, லாரியாக அனுப்பபடுகிறது. இதனால், "பசுமாடுகள் அதிகளவில் இறைச்சிக்காக விற்பனை செய்யப்படுவதால், கரூர் மாவட்டத்தில் நடப்பாண்டு பால் உற்பத்தி பெருமளவில் குறையும்' என, எதிர்பார்க்கப்படுகிறது.எனவே, கால்நடைகளுக்கு குறைந்தளவில் தீவனம் கிடைக்க, கரூர் மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**காவிரியாறு வரண்டதால் தண்ணீர் இல்லாமல் வாடிவரும் "வெற்றிலை'**

வேலாயுதம்பாளையம்: காவிரியாற்றில் தண்ணீர் இல்லாததால், வேலாயுதம்பாளையம் சுற்று வட்டார பகுதிகளில் வெற்றிலை கொடிகள் காயும் நிலை ஏற்பட்டுள்ளது.

கரூர் மாவட்டத்தில் புகளூர், வேலாயுதம்பாளையம், நொய்யல், சேமங்கி, நடையனூர், மரவாபாளையம், தவிட்டுப்பாளையம், திருக்காடுதுறை உள்ளிட்ட பகுதிகளில் 5,000 க்கும் மேற்பட்ட ஏக்கரில் வெற்றிலை பயிரிடப்படுகிறது.

குளித்தலை பகுதியில் மாயனூர், சித்தலவாய், லாலாபேட்டை, உள்ளிட்ட பகுதிகளிலும், காவிரியாற்றின் கரையோர பகுதிகளிலும் வெற்றிலை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. கரூர் மாவட்டத்தில் விளையும் பசுமை மாறாத நிறம் கொண்ட வெற்றிலைக்கு தனிச்சுவை உண்டு. இதனால், கரூர் மாவட்டத்தில் இருந்து வெளியூருக்கு வெற்றிலை அனுப்பி வைக்கப்படுகிறது.

இந்நிலையில், மேட்டூர் அணையில் போதிய தண்ணீர் இல்லாததால், குடிநீர் தேவைக்கு மட்டும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. பருவமழை தவறி விட்டதால், நிலத்தடி நீரும் பாதிக்கப் பட்டுள்ளது. இதனால், விவசாயத்துக்கு போதிய தண்ணீர் இல்லாத சூழ்நிலை ஏற்பட்டு, வெற்றிலை கொடிகள் காயும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து, புகளூர் வட்டார வெற்றிலை விவசாயிகள் சங்க தலைவர் ராமசாமி கூறியதாவது: வேலாயுதம்பாளையம் பகுதியில் கற்பூரி பச்சைச்கொடி ரகம் அதிகளவில் பயிரிடப் படுகிறது. 100 வெற்றிலை கொண்டது ஒரு கவுளியாகவும், 20 கவுளி கொண்டது ஒரு கூடையாகவும், 26 கவுளிகள் கொண்டது ஒரு முட்டியாகவும், 104 கவுளிகள் கொண்டது ஒரு சுமையாகவும் பல வகைகளில் விற்பனை செய்யப் படுகிறது.

புகளூர் மற்றும் சுற்றுப்பகுதி வெற்றிலை சாகுபடிக்கு நீர் ஆதரமாக விளங்குவது புகளூர் பாசன வாய்கால் ஆகும். தற்போது, காவிரியாற்றில் தண்ணீர் இல்லாததால், புகளூர் பாசன வாய்க்காலிலும் தற்போது தண்ணீர் இல்லை. இதனால், ஃபோர்வெல் முலமாகவும், வாய்க்காலில் தேங்கி கிடக்கும் தண்ணீரை, டீஸல் இன்ஜின் மூலம், கூடுதல் செலவுகள் செய்து வெற்றிலை கொடிகளுக்கு பாய்ச்சி வருகிறோம்.

பல இடங்களில் வெற்றிலை கொடிகள் முழுமையாக காய்ந்து சருகாகி விட்டது. இதே நிலை நீடித்தால் விவசாயிகள் மற்றும் பல ஆயிரக்கணக்கான கூலி தொழிலாளர்கள் வேலை இழந்து பெரும் சோகத்திற்கு தள்ளப்படுவார்கள்.இவ்வாறு அவர் கூறினார்.

**கடும் வறட்சியில் டெல்டா பகுதி கருகும் வாழை : காப்பாற்ற போராடும் விவசாயிகள்**

கரூர்: டெல்டா பாசன விவசாயிகள், தங்கள் விளை நிலங்களில் பயிரிடப்பட்டு அறுவடை நிலையில் உள்ள வாழையை வறட்சியின் பிடியிலிருந்து காப்பாற்ற, ஆழ்துளை கிணறு அமைத்து, தண்ணீர் பாய்ச்சி போராடி வருகின்றனர்.

கரூர் மாவட்டத்தில் காவிரி டெல்டா பாசன பகுதியான கிருஷ்ணராயபுரம், லாலாபேட்டை, மாயனூர், மணவாசி, குளித்தலை, நச்சலூர், நங்கவரம் உள்ளது. இங்கு வாய்க்கால் பாசன மூலம், 53 ஹெக்டேர் நிலப்பரப்பில் பயிர் சாகுபடி நடந்து வந்தது.

ஆனால் பருவமழை பொய்த்து போனதாலும், கர்நாடக அரசு காவிரியில் தண்ணீர் திறக்காமல் வஞ்சித்ததால், இப்பகுதிகளில், 30 ஆயிரம் ஹேக்டேரில் நிலத்தில் மட்டும் வெற்றிலை, வாழை, கரும்பு ஆகிய பயிர்களை விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். இதில் பெரும்பலான விவசாயிகள், 8 மாதங்களுக்கு முன் வாழையை பயிரிட்டுள்ளனர்.

அறுவடை செய்யும் தருவாயில் உள்ள வாழைகள், கடும் வறட்சியின் காரணமாக கருகி வருகின்றன. இதனால் விவசாயிகள் எப்படியும் வாழையை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக வயலுக்கு அருகில் போர்வெல் அமைத்து வருகின்றனர். இதை பயன்படுத்தி, ஆழ்துளை கிணறு

அமைக்கும் கட்டணத்தை, போர்வெல் உரிமையாளர்கள் உயர்த்தியுள்ளனர்.
இது குறித்து அப்பகுதி விவசாயி ஒருவர் கூறியதாவது:
கரூர் மாவட்டத்தில் உள்ள காவிரி கரையோர பகுதிகளில், வாய்க்கால் பாசனத்தை நம்பி சாகுபடி நடந்து வந்தது. இப்பகுதிகளில் கிணறு, போர்வெல் மூலம் பாசன வசதி பெறும் நிலங்கள் மிகக்குறைவு.
கடந்தாண்டு காவிரியில் திறந்து விடப்பட்ட சிறியளவு தண்ணீர் மற்றும் அவ்வப்போது பெய்த மழை மூலம் இதுவரை வாழையை பிழைக்க வைத்து விட்டனர். ஆனால், தற்போது பறிக்கும் தருவாயில் உள்ள, வாழை பழங்கள் வறட்சி காரணமாக காய்ந்து வருகிறது. இதை காப்பாற்ற விவசாயிகள் படாதபாடுபடுகின்றோம்.
பெரும்பாலான விவசாய நிலங்களில் போர் எப்படியும் அமைக்க வேண்டும் என்பதற்காக விவசாயிகள் வீட்டுச் சொத்துப்பத்திரங்கள், மனைவியின் நகைகளை அடகு வைத்துள்ளனர். அத்தொகையில் எப்படியும் போர் அமைத்து பயிரை காப்பாற்றி விடலாம் என்ற முடிவுக்கு வந்துவிட்டனர்.
ஒவ்வொரு விவசாய விளைநிலத்திலும் போர் போடுவதற்கு தண்ணீர் ஊற்று எங்கே இருக்கிறது? என்பதை ஆய்வு செய்ய வாட்டர் டிவைனர்களை வைத்து ஆய்வு செய்கின்றனர். இதற்கு முன் சிலர் இலவசமாக நீர் ஊற்றை கண்டுபிடித்துக் கொடுத்தனர். இப்போது அதற்கு கட்டணம் நிர்ணயித்தனர். அக்கட்டணத்தை தற்போது இரண்டாயிரம் ரூபாயாக உயர்த்தியுள்ளனர். ஊற்று கண்டுபிடிக்கவே கட்டணத்தை உயர்த்தியுள்ளனர் என்றால், பல மடங்கு கட்டணத்தை போர்வெல் உரிமையாளர்கள் அதிகரித்துள்ளனர் .
இப்பகுதிகளில் போர்வெல் அமைக்க அடிக்கு 55 லிருந்து 65 ரூபாயாக கட்டணம் உயர்த்தி, கொள்ளை லாபம் அடிக்கின்றனர். வேடச்சந்தூர், நாமக்கல் ஆகிய பகுதிகளில் போர்வெல் வாகனங்கள் இருக்கிறது. அவர்ளை தேடி பிடிக்க புரோக்கர் கட்டணம், 500 ரூபாய் தனியாக கொடுக்க வேண்டும்.
இதன்காரணமாக தற்போது பயிரிட்டுள்ள வாழையை காப்பாற்றினால் போதும் என்று, 150 அடிக்கு மட்டும் போர்வெல் போடப்படுகிறது. போர் போட்ட பிறகு, 15 அடிக்கு பி.வி.சி குழாய் பதிக்க, அதையும் தங்களிடம் வாங்க வேண்டும் என அதன் உரிமையாளர்கள் கட்டாயப்படுத்துகின்றனர்.
இந்த குழாய்க்கு, 1500 ரூபாய் வசூலிக்கப்படுகிறது. ஆனால், வெளி மார்க்கெட்டில், இதன் விலை 800 ரூபாயாக விற்பனை செய்யப்படுகிறது. இதுமட்டுமல்லாது மின்பற்றாக்குறை காரணமாக, டீசல் மோட்டார் பொருத்த வேண்டும். ஓர் ஏக்கருக்கு ஒரு மணி நேரம் தண்ணீர் பாய்ச்ச, 300 ரூபாய் டீசல் செலவாகிறது. இதன் மூலம் ஒரு விவசாயிக்கு கூடுதலாக ஓர் ஏக்கருக்கு 55 ஆயிரம் மேல் செலவாகிறது.

சிலர் போர்வெல் அமைத்தவர்களிடமிருந்து, தண்ணீரை காசுக்கு வாங்கி, எஞ்சியிருக்கும் பயிரை காப்பாற்ற முடியுமா? என தவிக்கின்றனர். இப்படி செலவு செய்தாலும், பயிர்கள் பிழைக்குமா? என்பது கேள்வி குறிதான். வாழை பணப்பயிர் என்பதால், அரசின் வறட்சி நிவாரண தொகையும் கிடைக்காது.

இவ்வாறு அவர் கூறினார்.

ஆனால், போர்வெல் உரிமையாளர்கள், கூறுகையில், ""டீஸல், ஆயில், இரும்புபைப், பி.வி.சி.,பைப் என்று அனைத்து பொருட்களின் கட்டணங்களும் உயர்ந்துவிட்ட நிலையில் நாங்கள் மட்டும் விலையை உயர்த்தாமல் எப்படி இருக்க முடியும்?. பணியாளர் சம்பளம், லாரி தேய்மானம் மற்றும் போர் இன்ஜின் தேய்மானம், ஆயில், கிரீஸ் என்று ஏராளமான செலவு எங்களுக்கு காத்திருக்கிறது. அதனால் தான் கட்டணத்தை உயர்த்தியுள்ளோம். இது தமிழ்நாடு முழுக்க இருப்பது தான். இடத்துக்கு இடம் சிறிய அளவிலான வேறுபாடு இருக்கும். பெரிய அளவில் வித்தியாசம் இருக்காது," என்கின்றனர்.

**மானியத்தில் விதை உருளைகிழங்கு அதிக மகசூலை பெற அறிவுறுத்தல்**

திண்டுக்கல்:விவசாயிகளுக்கு முதல்முறையாக மானிய விலையில் சான்றிதழ் பெற்ற விதை உருளை கிழங்குகள் வினியோகிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் உருளை கிழங்கு சாகுபடியில் அதிக விளைச்சலை பெறமுடியும் என்ற எதிர்பார்ப்பு விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. கொடைக்கானல் மற்றும் மேல்மலை பகுதிகளில் உருளை கிழங்கு அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. கடந்த முறை தரமான உருளை கிழங்குகள் விளைவிக்கப்பட்டு அதிக அளவில் பிற மாவட்ட விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டன. உருளைகிழங்கு விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டுமென்பதற்காக இம்முறை சான்றிதழ் பெற்ற விதை உருளை கிழங்குகளை வினியோகிக்க தோட்டக்கலைத்துறையினர் முடிவு செய்திருந்தனர். இதற்காக கிருஷ்ணகிரியில் இருந்து 40,250 கிலோ விதை உருளை கிழங்குகள் வரவழைக்கப்பட்டு 50 சதவீத மானியத்தில் விவசாயிகளுக்கு வினியோகிக்கப்பட்டன.தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் ராஜா முகமது கூறியதாவது: மானிய விலையில் விதை உருளை கிழங்குகள் பெற்ற அனைத்து விவசாயிகளையும் தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தின் கீழ்உறுப்பினர்களாக பதிவு செய்துள்ளோம். முதல் முறையாக விதை உருளை கிழங்குகள் மானியத்தில் வினியோகிக்கப்பட்டுள்ளன. சாகுபடிக்கு பின் நல்ல விளைச்சல் கிடைத்தால் தொடர்ந்து இதே முறையை பின்பற்ற முடிவு செய்துள்ளோம், என்றார்.

**மண்மாதிரி எடுக்கக்கோரிவேளாண்மை துறை யோசனை**

குஜிலியம்பாறை:குஜிலியம்பாறை ஒன்றியத்தில், பெரும்பாலான பகுதிகளில் பயிரிடப்பட்டு இருந்த நெல், காய்கறி பயிர்கள் அறுவடை முடிந்து, தற்போது நிலம் தரிசாக உள்ளது. எதிர்வரும் கோடை பருவத்திற்கேற்ற, எள், கம்பு, பயறு வகைகள், சோளம், மக்காச்சோளம் ஆகிய பயிர்கள்,

சாகுபடி செய்யும் முன்பாக, நிலங்களில் உள்ள மண் வகைகளுக்கு ஏற்ப, மாதிரிகள் சேகரம் செய்து, சத்துக்களின் அளவுகள், ரசாயனம் உப்புக்கள் விகிதாச்சாரத்தை அறிந்து கொள்ளலாம். அதற்கேற்ப இயற்கைஉரங்களை வெகுவாக பயன்படுத்தி, மண் வளம் காத்து, மகசூல் அதிகரிக்கலாம். தேவையான உயிர் உரங்கள், விதைநேர்த்தி காரணிகள் வேளாண்மை விரிவாக்க மையங்களில் 50 % மானியத்தில் விநியோகிக்கப்படுகிறது. இதை பயன்படுத்தி கொள்ளுமாறு, வேளாண் உதவி இயக்குநர் ரவிபாரதி கேட்டுக்கொண்டுள்ளார்.

**தேனி மாவட்ட விவசாய வளர்ச்சிகுழுவிற்கு ரூ.16 லட்சம் வழங்கல்**

தேனி:தேனி மாவட்ட விவசாய வளர்ச்சி குழுவிற்கு, 16 லட்சம் ரூபாய்க்கு நவீன உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. மாவட்டத்தில் உள்ள எட்டு ஊராட்சி ஒன்றியங்களில் இருந்து, விவசாய உபகரணங்களை இயக்கத் தெரிந்த, இரண்டு விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு 16 பேர் கொண்ட விவசாய வளர்ச்சிக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு நான்காக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு குழுவிற்கும், ஒரு பவர் டில்லர், ஒரு களையெடுக்கும் கருவி, ஒரு நெல் நடவு செய்யும் கருவி வழங்கப்பட்டுள்ளது. இதேபோல், நான்கு குழுவிற்கும் சேர்த்து 16 லட்சம் ரூபாய் செலவில் இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.இக்குழுவினர் விவசாய பணிக்கு இந்த உபகரணங்களை குறைந்த வாடகைக்கு விட வேண்டும். வாடகை வருவாய் மூலம் தங்களுக்கு சம்பளம் எடுத்துக் கொள்ளலாம். மீதப்பணத்தில் உபரகரணங்களை பராமரிக்க வேண்டும், என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்த 206 தடுப்பணைகள்**

தேனி:தேனி மாவட்டத்தில், நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்த 7 கோடி ரூபாய் செலவில் 206 தடுப்பணைகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.மேற்கு தொடர்ச்சி மலை அபிவிருத்தி திட்டத்தில் கம்பம், சின்னமனூர், போடி ஊராட்சி ஒன்றியங்களில் 120 தடுப்பணைகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. அதேபோல் செயற்கை நீர் செறிவூட்டும் திட்டத்தில், எட்டு ஊராட்சி ஒன்றியங்களிலும் 86 தடுப்பணைகள் கட்டப்பட உள்ளன. இதற்கான திட்ட மதிப்பீடு 7 கோடி ரூபாய். வரும் நிதியாண்டில், இந்நிதி கிடைத்தவுடன் பணிகள் முடிக்கப்படும். இதன் பிறகே மாவட்டத்தில் நிலத்தடி நீர் மட்டம் உயரும் வாய்ப்புள்ளதாக, அதிகாரிகள் தெரிவித்தனர்.

**கொப்பரை தேங்காய்க்கு ரூ.75விலை நிர்ணயிக்க வலியுறுத்தல்**

தேனி:கொப்பரை தேங்காய் விலையை, கிலோ 75 ரூபாயாக நிர்ணயித்து அரசே கொள்முதல் செய்யவும், தேங்காய்க்கு 15 ரூபாய் விலை நிர்ணயிக்கவும், தேனி மாவட்ட தென்னை

விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.அவர்கள் மனுவில் கூறியிருப்பதாவது: கொப்பரை தேங்காய்க்கு, கிலோ 75 ரூபாய் விலை நிர்ணயித்து அரசே கொள்முதல் செய்ய வேண்டும். ஒரு தேங்காய்க்கு விலை 15 ரூபாய், என நிர்ணயிக்க வேண்டும். கம்பம், உத்தமபாளையம், சின்னமனூர், தேனி, பெரியகுளம் பகுதிகளில் அரசு கொள்முதல் நிலையங்கள் திறக்க வேண்டும். தென்னை உற்பத்தி அதிகம் உள்ள பகுதிகளான கூடலூர், கம்பம், உத்தமபாளையம், பெரியகுளம் பகுதிகளில் உலர் களங்கள் அமைக்க வேண்டும். மாவட்டத்தில் அரசு சார்பில் தென்னை சார்ந்த தொழிற்சாலைகள் திறக்க வேண்டும். கேரளாவைப்போல் தென்னை விவசாயிகளுக்கு கூடுதல் மானியம், உரம் மற்றும் பூச்சி கொல்லி மருந்துகளை 50 சதவீதம் மானியத்தில் வழங்க வேண்டும், என்ற கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டுள்ளன.

**நெல் சாகுபடியில் இயந்திரமாக்கல்**

ராமநாதபுரம்:வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பில், ராமநாதபுரம் அருகே களத்தாவூரில் நெல் சாகுபடியில் இயந்திரமாக்கல் குறித்த செயல் விளக்க கூட்டம் நடந்தது. உழவியல் துறை உதவி பேராசிரியர் துக்கையண்ணன் தலைமை வகித்தார். உதவி பேராசிரியர் கணபதி வரவேற்றார். தட்டு நாற்றாங்கால், இயந்திர நடவின் நன்மைகள், நீர் மேலாண்மை, அதிக விளைச்சல் தரும் ரகங்கள் பற்றி விளக்கமளிக்கப்பட்டது. பூச்சியில் துறை உதவி பேராசிரியர் விஜயராகவன் நோய் கட்டுப்பாடு குறித்து பேசினார். ஏற்பாடுகளை விவசாயிகள் தமயந்தி, புகழேந்தி செய்தனர்.

**கோடைமழைக்கு பிஞ்சுவிட்டு பலா சீசன்... விவசாயிகளுக்கு கோடை மழைகை கொடுக்குமா**

வத்திராயிருப்பு:அவ்வப்போது பெய்த கோடை மழையால் பலா மரங்கள் அதிகளவில் பிஞ்சுவிட்டு வருகின்றன. மாவட்டத்தில் பலா சீசன் துவங்கியுள்ளது. வறட்சி, மின்வெட்டால் தொடர்ந்து இழப்பை சந்தித்து வரும் விவசாயிகளுக்கு, பலா மகசூல் அதனை ஈடுகட்டியுள்ளது.மாவட்டத்தில் மேற்குத்தொடர்ச்சி மலையை ஒட்டிய விவசாயப்பகுதிகளான ராஜபாளையம், சேத்தூர், தேவதானம், ஸ்ரீவில்லிபுத்தூர், வத்திராயிருப்பு, பிளவக்கல்அணை பகுதி, சதுரகிரி தாணிப்பாறை பகுதிகளில் பலா மரங்கள் அதிகளவில் உள்ளன. பிப்ரவரி மாதம் முதல் காய்க்க துவங்கி ஜூன் மாதம் வரை மகசூல் கொடுக்கும். அதன் பின் மழை துவங்கி பலா விளைச்சலுக்கு உரிய சீதோஷ்ண நிலை மாறிவிடுவதால், மகசூல் அத்துடன் நின்றுவிடும். இந்த ஆண்டு பிப்ரவரியில் பலாக்காய்கள் பிஞ்சு விடும் நேரத்தில் அதிக வெயில் அடித்ததாலும், மரங்களுக்கு போதிய நீரோட்டம் இல்லாததாலும் பிஞ்சு விடுவதில் தாமதம் ஏற்பட்டது. அத்துடன் பிஞ்சுகளும் வெயிலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் உதிர்ந்தன. இந்நிலையில் அவ்வப்போது கோடை மழை திடீரென பெய்ததால் மரங்கள் குளுமையடைந்து அதிகளவில் பிஞ்சுகள் விடத்துவங்கின. அத்துடன் ஏற்கனவே விட்ட பிஞ்சுகளும் உதிராமல் நின்றன. பலா விளைச்சல் மாவட்டம்

முழுவதும் களைகட்டியுள்ளன. பொதுவாக பலா மரங்களை மட்டும் வைத்து யாரும் விவசாயம் செய்வதில்லை. தென்னை, கொய்யா, மாமரங்கள் வைத்து விவசாயம் செய்பவர்கள் ஊடு விவசாயமாக பலா மரங்களை வைத்துக் கொள்வார்கள். வறட்சி, மின்வெட்டு போன்றவற்றால் அனைத்து வகை விவசாயமும் அடுத்தடுத்து நஷ்டத்தை சந்தித்து வரும் நிலையில் தற்போது பலா மகசூல் விவசாயிகளுக்கு ஓரளவு நஷ்டத்தை சமாளிக்க உதவி வருகிறதுஇது குறித்து மகாராஜபுரம் விவசாயி ஸ்ரீராமுலு கூறுகையில், "" பலா மரங்கள் அதிகளவில் பிஞ்சுவிட்டு வருவது விவசாயிகளுக்கு ஆறுதலை கொடுத்துள்ளது. தற்போது வெயிலின் தாக்கம் மிக கொடூரமாக உள்ளது. இது தொடர்ந்தால் பிஞ்சுகள் உதிரும் நிலை ஏற்படும். இடையே கோடை மழை பெய்தால் மட்டுமே விவசாயிகளின் இந்த மகிழ்ச்சி நிரந்தரமாகும்' என்றார்.

**மலையோர கிராமங்களில்கால்நடை சிகிச்சை முகாம்**

வத்திராயிருப்பு:மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதி கிராமங்களில் வனத்துறையின் சார்பில் கால்நடை பாதுகாப்பு முகாம் நடந்தது.மலையடிவார கிராமங்களில் மக்கள் வளர்க்கும் கால்நடைகளுக்கு ஏற்படும் நோய், அருகே வனப்பகுதிகளில் வசிக்கும் மிருகங்களுக்கும் பரவிவிடாமல் தடுக்கும் நோக்கில், மேற்குத்தொடர்ச்சி மலை சாம்பல்நிற அணில் சரணாலயத்திற்கு உட்பட்ட மலையோர கிராமங்களில் கால்நடை பாதுகாப்பு, சிகிச்சை முகாம் நடந்தது. அரசின் உயிர்பன்மை பாதுகாப்பு, மற்றும் பசுமையாக்கல் திட்டத்தின் கீழ் நடந்த முகாம்களை, மாவட்ட வனப்பாதுகாவலர் அசோக்குமார் துவக்கினார். சுந்தரநாச்சியார்புரம், சேத்தூர், மம்சாபுரம், புதுப்பட்டி, கான்சாபுரம், கிழவன்கோவில், கொடிக்குளம், மதுரைமாவட்டம் எம்.கல்லுப்பட்டி, சந்தையூரில் முகாம் நடந்தது. வனச்சரகர்கள் பால்பாண்டியன், கருமலையான், வேல்சாமி, பாலசுப்பிரமணியன் தலைமை வகித்தனர். முன்னெச்சரிக்கை தடுப்பூசி போடப்பட்டது. இலவச மருந்துகளும் வழங்கப்பட்டன. ஏற்பாடுகளை தொழில்நுட்ப உதவியாளர் செந்தூரன் செய்திருந்தா

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**1.04.2013 A.M**

---

**நக்சல் பாதிப்பு கிராமத்தில் 175 பேருக்கு முழு மானியத்துடன் விவசாய உபகரணங்கள் வழங்கல்**

தர்மபுரி, : தர்மபுரி அருகே, நக்சல் பாதிப்பு கிராமத்தில் 175 பேருக்கு முழு மானியத்துடன் விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டது.

தர்மபுரி மாவட்ட எஸ்பி ஆஸ்ராகர்க் உத்தரவின் பேரில், மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டு திட்டத்தின் கீழ், காரிமங்கலம் ஊராட்சியில் பூமாண்டஅள்ளி, பைசுஅள்ளி பஞ்சாயத்திற்குட்பட்ட நக்சலைட் பாதிக்கப்பட்ட கிராமங்களில் உள்ள ஏழை விவசாயிகள் பயன்பெறும் வகையில், முழுமானியத்துடன் 175 பேருக்கு விவசாய உபகரணங்கள் தலா ஒரு மண்வெட்டி, கடப்பாறை, பிக்காஸ், 2 இரும்பு பாண்டம் ஆகியவை வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்கு காரிமங்கலம் வட்டார வளர்ச்சி அலுவலர் முகமதுஅலி தலைமை வகித்து, உபகரணங்களை வழங்கினார். விழாவில் தர்மபுரி நக்சலைட் தனிப்பிரிவு இன்ஸ்பெக்டர் ஹயாத், மதிகோண்பாளையம் இன்ஸ்பெக்டர் சுபாஷ், எஸ்எஸ்ஐ அருண், ஏட்டு பழனி, கவிதா நாகராஜ், கோபி மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.

**மானிய விலையில் கால்நடைகளுக்கு தீவனம் வழங்கும் பணி**

திருச்சி, : ஸ்ரீரங்கம் தொகுதி புங்கனூரில் பால் உற்பத்தியாளர்களுக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலம் மானிய விலையில் கால்நடை தீவனம் வழங்கும் பணியை அமைச்சர் பூனாட்சி தொடங்கி வைத்தார்.

காவிரி டெல்டா மாவட்டங்களான திருச்சி, கரூர், அரியலூர், புதுகை, நாகை, திருவாரூர், தஞ்சை மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களில் தற்போது வறட்சி ஏற்பட்டுள் ளது. இதையடுத்து பால் உற்பத்தியாளர்களுக்கு பால் உற்பத்தியாளர் கூட் டுறவு சங்கங்கள் மூலம் ரூ. 11.62 கோடி மானியத்தில் கால்நடை தீவனம் மற்றும் ரூ. 3.38 கோடி மானியத்தில் தாது உப்புக்கலவை என ரூ. 15 கோடி நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

திருச்சி மாவட்டத்தில் 282 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களில் 18,732 உறுப்பினர்கள் மூலம் 30,813 கறவைப்பசுக¢கள் மூலம் பால் கொள்முதல் நடக்கிறது. இக்கால்நடைகளுக்கு நாள்

ஒன்றுக்கு ரூ. 1.23 லட்சம் மானியத்தில் கால்நடை தீவனமும், ரூ. 38,500 மானியத்தில் தாது உப்புக்கலவையும் என மொத்தம் ரூ. 1.61 லட்சம் மானியத்தில் தீவனம் தரும் பணி தொடங்கப்பட்டது. தமிழக முதல்வர் உத்தரவின்பேரில், திருச்சியில் ஸ்ரீரங்கம் தொகுதி புங் கனூர் கிராமத்தில் நடந்த நிகழ்ச்சியில் அமைச்சர் பூனாட்சி கால்நடை தீவ னம் மற்றும் தாதுஉப்புகலவை வழங்கும் பணியை துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் அரசு தலைமை கொறடா மனோ கரன், கலெக்டர் ஜெயஸ்ரீ, எம்.பி. குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### பால் உற்பத்தியில் தமிழகம் முன்னிலை அமைச்சர் பேச்சு

காரைக்குடி, : இலவச மாடு வழங்கும் திட்டத்தால் பால் உற்பத்தியில் தமிழகம் முன்னிலையில் உள்ளதாக அமைச்சர் ராஜேந்திர பாலாஜி தெரிவித்தார்

காரைக்குடியில் அதி முக சார்பில் பட்ஜெட் விள க்க பொதுக்கூட்டம் நடந்தது. சோழன்சித பழனிச்சாமி எம்எல்ஏ தலைமை வகித் தார். நிகழ்ச்சியில் செய்தி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமை ச்சர் ராஜேந்திர பாலாஜி பேசுகையில், ‘தமிழக அரசு வரியில்லாத, வரி உயர்வு இல்லாத பட்ஜெட்டை மக்களுக்காக வழங்கி உள்ளது. மாணவர்களுக்கு இலவச லேப்டாப் வழங்க ரூ.1500 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த 2 ஆண்டுகளில் 1.20 லட்சம் மாடுகள் வழங்கப்ப ட்டுள்ளன. இந்த நிதி ஆண் டில் 60 லட்சம் கறவை மாடு களும், 1.50 லட் சம் பயனாளிகளுக்கு 6 லட் சம் ஆடுகள் வழங்கப்பட உள்ளது. இல வச கறவை மாடுகள் திட்ட த்தால் தமிழகம் பால் உற்பத் தில் முன்னிலையில் உள்ளது’ என்றார். நிகழ்ச்சியில் நகர்மன்ற தலைவர் கற்பகம் இளங் கோ, முன்னாள் எம்எல்ஏ உமாதேவன், மாவட்ட செய லாளர் முருகானந்தம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### கரும்பு விவசாயிகள் ஆலோசனை கூட்டம்

காஞ்சிபுரம், : உத்திரமேரூர் வட்டார கரும்பு விவசாயிகளின் ஆலோசனை கூட்டம் உத்திரமேரூரில் நடந்தது. திமுக மாவட்ட அமைப்பாளர் சோழனூர் ஏழுமலை தலைமை வகித்தார். உத்திரமேரூர் ஒன்றிய செயலாளர் இரா.நாகன் வரவேற்றார். பேரூராட்சி தலைவர் சுமதி குணசேகரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில், காமராஜர் ஆட்சி காலத்தில் கொண்டு வரப்பட்ட படாளம் கூட்டுறவு சர்க்கரை ஆலை, அதிக உறுப்பினர்களுடன் செயல்பட்டது. அப்போது உத்திரமேரூர் தாலுகா இதனுடன் இணைக்கப்பட்டது. திடீரென படாளம் ஆலை மூடப்பட்டால், பழைய சீவரத்திலுள்ள எஸ்பிஎஸ் தனியார் சர்க்கரை ஆலையுடன் உத்திரமேரூர் இணைக்கப்பட்டதால் கரும்பு விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். உத்திரமேரூர் பகுதியை படாளம் சர்க்கரை ஆலையுடன் இணைக்கவேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## விவசாயிகளுக்கான விழிப்புணர்வு முகாம்

கிருஷ்ணகிரி,:கிருஷ்ணகிரி மாவட்டத்தில் விவசாயிகளுக்கான விழிப்புணர்வு பயிற்சி முகாம் மூன்று இடங்களில் நடந்தது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண்மை வணிகத்துறை மூலமாக நீர்வள நிலவளத்திட்டம் 2012-2013ன் கீழ் கிருஷ்ணகிரி ஒழுங்குமுறை விற்பனைக் கூட வளாகம், சூளகிரி வட்டம் கீரனப்பள்ளி ஆஞ்சநேயர் கோவில் வளாகம், ஓசூர் வட்டம் தட்டிகானப்பள்ளி வேளாண் வணிக வளாகம் ஆகிய மூன்று இடங்களில் விவசாயிகள் விழிப்புணர்வு முகாம் நடந்தது. இந்த முகாம்கள் ஒவ்வொன்றிலும் விவசாய விளைபொருள் குழுவினைச் சேர்ந்த 20 விவசாயிகள் கலந்துகொண்டனர். முகாமில் வேளாண்மை துணை இயக்குநர் பூபதி, வேளாண்மை அலுவலர்கள் பூர்ணமதி, அருள்தாஸ், உதவி வேளாண்மை அலுவலர்கள் சுந்தரராஜன், பெருமாள், முருகேசன் ஆகியோர் கலந்துகொண்டு பல்வேறு பயிர்களுக்கான அறுவடை பின் செய்ய வேண்டிய நேர்த்தி, விளை பொருட்களை உலர வைத்தல், ஈரப்பதம் கண்டறிதல், தரம் பிரித்தல், சந்தை விலை நிலவரம் அறிதல், விளைபொருள் குழு மூலம் நல்ல விலைக்கு விற்பனை செய்தல் குறித்து விவசாயிகளுக்கு எடுத்து கூறினர்.

எலுமிச்சங்கிரி டாக்டர் பெருமாள் வேளாண் அறிவியல் மைய உதவி பேராசிரியர் பூமதி, முகாமில் பங்கேற்று விளைபொருட்களுக்கு மதிப்பு கூட்டுதல் குறித்து எடுத்துரைத்தார்.

## திருப்பூர் வடக்கு உழவர் சந்தையில் ரூ.44கோடியே, 86லட்சத்துக்கு காய்கறிகள் விற்பனை

அனுப்பர்பாளையம்,: திருப்பூர் வடக்கு உழவர் சந்தையில் கடந்த ஒரு வருடத்தில்(1.4.2012 முதல் 31.3.2013) மட்டும் ரூ. ரூ.44கோடியே 86லட்சத்து 3 ஆயிரத்து 500 மதிப்புள்ள காய்கறிகள் விற்பனை நடைபெற்றுள்ளது.

திருப்பூர் புதிய பஸ் நிலையம் அருகே உள்ள வடக்கு உழவர் சந்தைக்கு, தினமும் அதிகாலை 3 மணிக்கே 6 அரசு பஸ்களில் சுமார் 500 விவசாயிகள் தங்களது விளை பொருள்களான அவரை, தக்காளி, கத்தரி, புடலை, பீர்க்கங்காய், பாகற்காய், சேனை, நிலக்கடலை, வாழை, வெங்காயம், கீரைவகைகள் ஆகியவறை கொண்டுவந்து விற்று செல்கின்றனர். இங்கு, பல தரப்பட்ட விவசாயிகள் விளை பொருட்களை கொண்டு வருகின்றனர். கருவலூர், நம்பியாம்பாளையம், பொகளூர், அவிநாசி, நம்பியூர், குன்னத்தூர், மலையப்பாளையம், பெருமாநல்லூர், சேவூர், கருமத்தம்பட்டி, ஊத்துக்குளி, இடுவாய் ஆகிய பகுதிகளைச்சேர்ந்த சுமார் 600 விவசாயிகள் தங்களது விளை பொருட்களான காய்கறிகளை, இங்கு கொண்டு வந்து விற்று வருகின்றனர். இங்கு நாள் ஒன்றுக்கு, சுமார் 68 டன் வரை அனைத்து காய்கறிகளும் வருகின்றன.

திருப்பூர் வடக்கு உழவர் சந்தையில், கடந்த வருடம்(1.4.2012 முதல் 31.3.2013வரை) 2கோடியே 50லட்சத்து 18 ஆயிரத்து 405 கிலோ எடையுள்ள காய்கறிகள் இங்கு மொத்த விற்பனை செய்யப்பெற்றுள்ளது.

மேலும், திருப்பூர் வடக்கு உழவர் சந்தையில், கடந்த வருடம் மட்டும், மொத்தம் 69746 விவசாயிகள் உழவர் சந்தைக்கு தங்களது விளைபொருட்களை கொண்டு வந்து விற்பனை செய்து பயனடைந்துள்ளனர்.

31 லட்சத்து 28 ஆயிரத்து, 205 பேர் இங்கு வந்து பொருட்களை வாங்கிச்சென்று பயனடைந்துள்ளனர். திருப்பூர் வடக்கு உழவர் சந்தையில் கடந்த ஒரு வருடத்தில் மொத்தம் ரூ.44கோடியே 86லட்சத்து 3 ஆயிரத்து 500 மதிப்புள்ள காய்கறிகள் விற்பனை நடைபெற்றுள்ளது.

இது தொடர்பாக, திருப்பூர் வடக்கு உழவர் சந்தை நிர்வாக அலுவலர் ராதாகிருஷ்ணன் கூறுகையில்,

‘‘பருவ மழை பொய்த்துவிட்டதால், கிலோ ஒன்றுக்கு, வெண்டை-ரூ.20க்கும், கத்தரி-40க்கும் , புடலங்காய் ரூ.16க்கும், பாகற்காய்-ரூ 24.க்கும், தக்காளி ரூ.10க்கும், பீர்க்கங்காய்-ரூ.30க்கும், அவரைக்காய்ரூ.40க்கும் கொத்தவரைக்காய் ரூ.24க்கும், பீட்ரூட், முள்ளங்கி ரூ.20க்கும், சுரைக்காய் ரூ,.8க்கும், பூசணிக்காய்-ரூ12க்கும், சின்னவெங்காயம் ரூ.28க்கும் பெரியவெங்காயம் ரூ.20க்கும் நேற்று, திருப்பூர் வடக்கு உழவர் சந்தையில் விற்பனையானது. பச்சை மிளகாய்,, ரூ30லிருந்து ரூ.40 ஆக உயர்ந்துள்ளது. மேலும் உயர வாய்ப்புள்ளது. சென்ற வாரம், கிலோவுக்கு ரூ.40 வரை விலை அதிகளவு விற்பனையான பவானி கத்தரிக்காய் நேற்று விலை வீழ்ச்சியடைந்தது. நேற்று கிலோ ஒன்றுக்கு விலை, ரூ. 20 ஆக (அதாவது பாதியாக) குறைந்தது. இதேபோல, சென்ற வாரம் கிலோவுக்கு விலை ரூ.30 வரை விற்பனையான முருங்கைக்காய், நேற்று விலை வீழ்ச்சியடைந்து கிலோ ரூ. 15 ஆக அதாவது பாதியாக குறைந்தது. தக்காளி கிலோ ரூ. 6-க்கு விற்று வந்தது. நேற்று ரூ 11 வரை விலை உயர்ந்தது.

வெண்டைக்காய் பயிரிடுவதில் விவசாயிகள் அதிகளவு ஆர்வம் காட்டுவதில்லை. ஏனெனில், வெண்டைக்காய் பயிருக்கு போதிய அளவு தண்ணீர் அடிக்கடி விட வேண்டும், வெண்டைக்காயை தினமும் பறிக்க வேண்டும், கடுமையான வெயிலாகவும்,வறட்சியாகவும் உள்ளதால், விரைவில் செடி வாடி வதங்கிவிடுகிறது. வெண்டைக்காய் பயிரிடுவதில் விவசாயிகள் அதிகளவு ஆர்வம் காட்டுவதில்லை. இதனால் விளைச்சல் குறைந்து, வரத்தும் குறைந்து, வெண்டைக்காய் விலை தற்போது (கிலோ ஒன்றுக்கு ரூ.42) இரட்டிப்பு உயர்வுஆனது.

திருப்பூர் வடக்கு உழவர் சந்தையில், கடந்த வருடம் 7538 விவசாயிகள் இங்கு வந்து, தங்களது விளை பொருட்களான 350 டன் காய்கறிகளை கொண்டுவந்து, ரூ. 67 லட்சத்து 8ஆயிரத்து 895 மதிப்பிலான காய்கறிகளை, திருப்பூர் வடக்கு உழவர் சந்தை குளிர் பதன கிடங்கு அறையில் பாதுகாப்பாக சேமித்து வைத்து பின்னர் விற்று பயனடைந்துள்ளனர்''என்றார்.

### சாகுபடி பரப்பை அதிகரிக்க விவசாயிகளுக்கு 2 நாள் தொழில்நுட்ப பயிற்சி

கரூர், : தோட்டக்கலை சாகுபடி பரப்பை அதிகரிக்க விவசாயிகளுக்கு இரண்டு நாள் தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டது.

தோட்டக்கலை பயிரின் சாகுபடி பரப்பை அதிகரிக்கவும், உற்பத்தி திறனை உயர்த்தும் நோக்கில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தோட்டக்கலை பயிற்சி மையத்தின் மூலம் கரூர் மாவட்டத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது. க.பரமத்தி வட்டாரம் டி.வெங்கடாபுரம் கிராமத்தில் நடைபெற்ற தோட்டக்கலை விவசாயிகள் தொழில்நுட்ப பயிற்சியை மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குனர் சதாசிவம் துவக்கினார். 50 தோட்டக்கலை விவசாயிகள் பயிற்சியில் கலந்து கொண்டனர். தோட்டக்கலை பயிர்களின் புதிய சாகுபடி தொழில்நுட்ப உத்திகளை விளக்கினார். வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் (பொ) சொர்ணமாணிக்கம் மூலிகை பயிர்களின் சாகுபடி தொழில் நுட்பங்களை விளக்கினார். சொட்டு நீர்ப்பாசனம் அமைப்பதற்கான வழிமுறைகள், சொட்டுநீர்ப் பாசன கருவிகளால் பராமரிக்கும் முறைகள், குறித்தும் ஜெயின் இர்ரிகேஷன்ஸ் நிறுவன பிரதிநிதி செந்தில்குமார் விளக்கினார். தென்னையில் கோகா பயிரை ஊடுபயிராக சாகுபடி செய்து கூடுதல் லாபம் பெற்று பயனடையுமாறு கேட்பரிஸ் நிறுவன பிரதிநிதி கல்யாணராஜன் கூறினார். தோட்டக்கலைத்துறை மூலம் செயல்படுத்தப்படும் மத்திய, மாநில அரசின் திட்டப்பயன்களை அடைவதற்கான வழிமுறைகளை வெற்றிவேல் விளக்கினார். பயிர் காப்பீட்டு திட்டத்தின் பலன்கள், பயனடைவதற்கான வழிமுறைகளை உதவி வேளாண்மை அலுவலர் சரவணன் எடுத்துக் கூறினார். 2ம்நாள் பயிற்சியில் கலந்து கொண்ட தோட்டக் கலை விவசாயிகள் தாந்தோணி வட்டாரம் வெள்ளியணை கிராமத்திற்கு வயல்வெளி பயிற்சிக்காக அழைத்து செல்லப்பட்டனர். அங்கு முன்னோடி விவசாயிகள் வயலில் நடைபெற்ற வயல்வெளி பயிற்சியில் தாந்தோணி வட்டார துணை அலுவலர் ஜானகி சொட்டுநீர் பாசனக் கருவிகளை பராமரிப்பது குறித்து விளக்கி கூறினார்.

### வெயில் காரணமாக உழவர்சந்தையில் காய்கறி விலை உயர்வு

கரூர், : கடும் வெயில் காரணமாக உழவர்சந்தையில் காய்கறி விலை உயர்ந்துள்ளது.

கரூர் உழவர்சந்தையில் கடந்த 10 நாட்களுக்கு முன் இருந்ததைவிட தற்போது காய்கறிகள் விலை

உயர்ந்துள்ளது. கரூர் உழவர்சந்தையில் நேற்று சின்னவெங்காயம் ரூ.28ஆகவும், பல்லாரி வெங்காயம் ரூ.20 ஆக குறைந்தது. அதேவேளையில் கடைகளில் வெங்காயம் விலை ரூ.40வரை விற்பனை செய்யப்பட்டது. பல்லாரி ரூ.30க்கு விற்பனையாகிறது. வெண்டைக்காய் கிலோ ரூ,26ஆக அதிகரித்துள்ளது. இஞ்சி கிலோ ரூ.70ஆகிவிட்டது. கடைகளில்ரூ.90 முதல் 100வரை விற்பனை செய்யப்படுகிறது. உழவர்சந்தையில் கீரை கட்டு ரூ.2.50க்கு கடந்த மாதம் விற்பனையானது. கடும் வெயில் காரணமாக விளைச்சல் பாதிக்கப்பட்டதால் ரூ.5ஆக உயர்ந்துவிட்டது. அகத்திக்கீரை, மணத்தக்காளி கீரை ஆகியவை ரூ.4க்கு விற்பனை செய்யப்பட்டது. தக்காளி நேற்று ரூ.6க்கு விற்கப்பட்டது. அவரைக்காய் விலை உயர்ந்து ரூ.45க்குக்கும், ரஸ்தாளி பழம் ஒரு டஜன் ரூ.36க்கு விற்றது.

### பூக்கள் சாகுபடி, தேனீ வளர்ப்பு பயிற்சி முகாம் பெண் விவசாயிகள்

பங்கேற்புதோகைமலை, : நபார்டு வங்கி மற்றும் சிநேகிதி தொண்டு நிறுவனம் சார்பில் பெண் விவசாயிகளுக்கான பூக்கள் சாகுபடி மற்றும் தேனீ வளர்ப்பு பற்றிய 6 நாள் பயிற்சி சேப்ளாப்பட்டியில் நடைபெற்றது.

சேப்ளாப்பட்டி, முதலைப்பட்டி பகுதியில் சுமார் 200 ஏக்கர் பரப்பளவில் பல்வேறு வகையான பூக்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இதில் விவசாயிகள் உரிய தொழில்நுட்பத்தை கடைபிடித்து அதிக அளவில் பூக்கள் மகசூல் பெறவும், பூக்கள் மூலம் மதிப்பூட்டப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்து அதிக லாபம் அடையவும் நபார்டு வங்கி உதவியுடன் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி முகாமை மாவட்ட நபார்டு வங்கி உதவி மேலாளர் பார்த்திபன் துவக்கி வைத்தார். பூக்கள் சாகுபடி, உயிரிதொழில்நுட்பத்தின் மூலம் 12 மாதங்களும் சாகுபடி செய்யும் வழிமுறைகள், மண் மேலாண்மை, நீர் மேலாண்மை, மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் முறையே பொக்கே, வாசனை திரவியங்கள் தயாரிப்பு, பூக்கள் மூலம் தேன்வளர்ப்பு குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. காதிகிராம தொழில்நுட்ப நிறுவன முன்னாள் அதிகாரி வில்சன், சரஸ்வதி வேளாண் அறிவியல் மையம் தோட்டக்கலைத்துறை தொழில்நுட்ப வல்லுநர் தனசேகர், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் டாக்டர் திரவியம், தொழில்நுட்ப உதவியாளர் கருப்பசாமி, நபார்டு உழவர்மன்ற நிர்வாகிகள் முதலைப்பட்டி அர்ஜூனன், நெய்தலூர் செல்லமுத்து, கண்ணதாசன், முன்னோடி விவசாயிகள் கோவிந்தராஜூ, சந்திரா, நாபின் நிதியகம் திட்ட மேலாளர் வடிவேல், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கோமளா, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் சத்தியா உள்ளிட்டோர் பயிற்சி அளித்தனர். 6 நாள் நடந்த பயிற்சியில் 30 பெண் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

### சின்னதாராபுரத்தில் இலவச ஆடுகளுக்கு தடுப்பூசி முகாம்

க.பரமத்தி, : கூடலூர் கிழக்கு ஊராட்சிக்கு வழங்கப்பட்ட ஆடுகளுக்கு இலவச ஆட்டுக்கொல்லி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற்றது.

க.பரமத்தி ஒன்றியத்திற்குட்பட்ட சின்னதாராபுரம் கால்நடை மருந்தகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற முகாமிற்கு கூடலூர் கிழக்கு ஊராட்சி தலைவர் புஷ்பவதி தலைமை வகித்தார். ஒன்றியகுழு உறுப்பினர் செந்தில் துவக்கி வைத்தார். சின்னதாராபுரம் கால்நடை உதவி மருத்துவர் மோகன்ராஜ் பேசுகையில், ஆடுகளுக்கு தடுப்பூசி போடுவது அவசியமாகும், ஆட்டுக்கொல்லிநோய் தடுப்பூசி போடுவதன் மூலம் ஆடுவளர்ப்போர் பொருளாதார இழப்பை தடுக்க முடியும். தடுப்பூசிகளை தவறாமல் போட வேண்டும். மேலும் வெள்ளாடுகளை எளிதில் டெட்டனஸ் என்னும் ரணஜன்னி தாக்க வாய்ப்புள்ளதால் காயம் ஏற்படும் போதும, குட்டி ஈனும் முன்பும் டெட்டனஸ் தடுப்பூசி போட வேண்டும். 3 முதல் 4 மாதங்களுக்கு ஒரு முறை குடற்புழு நீக்கம் செய்வதும், மழைகாலங்களில் இளம்புற்களை மேய்வதற்கு முன் துள்ளுமாரி நோய் தடுப்பூசி 6 மாதங்களுக்கு ஒரு முறை போடுவது அவசியம் என்றார். கால்நடை உதவிமருத்துவர் மோகன்ராஜ், எலவனூர் கால்நடை ஆய்வாளர் மணி, முடிகணம் கால்நடை ஆய்வாளர் சக்திவேல் ஆகியோர் கொண்ட குழுவினர் 550 ஆடுகளுக்கு ஆட்டுக்கொல்லி நோய் தடுப்பூசி போட்டனர்.

### நிவாரணம் கோரி விவசாய சங்கம் தெருமுனை பிரசாரம்

பொன்னமராவதி,: பொன்னமராவதி அருகே உள்ள காரையூரில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள், விவசாய தொழிலாளர்களுக்கு தமிழக அரசு நிவாரணம் வழங்கக்கோரி தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், அகில இந்திய விவசாய தொழிலாளர்கள் சங்கம் சார்பில் தெருமுனைப் பிரசாரம் நடந்தது. விவசாய சங்க தாலுகா தலைவர் ராம சாமி தலைமை வகித்தார். விவசாய தொழிலாளர் சங்க தாலுகா செயலாளர் பிரதாப்சிங் முன்னிலை வகித் தார். விவசாய சங்கத் தலை வர் மாவட்டத் தலைவர் செபஸ்தியான், விவசாய தொழி லாளர் சங்க தாலுகா செயலாளர் தாமரைசெல்வன், துணைச் செய லாளர் திருமூர்த்திசெல்வன், பொருளாளர்கள் சவுந்தரராசன், சோலையப்பன், நிர்வாகிகள் நாவலன், மாயழகு, முத்துக்கோனார், அழகப்பன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

### பாரம்பரிய உணவு, தானிய உற்பத்தி செய்தால் வருங்கால சமுதாயத்தை நோயற்றவர்களாக மாற்ற முடியும் இயற்கை வேளாண் விஞ்ஞானி பேச்சு

புதுக்கோட்டை,: பாரம்பரிய உணவு, தானிய, பயறு வகைகளை பயிரிட்டு பயன்பாட்டுக்கு மக்களிடம் கொண்டு செல் வதன் மூலம் வருங்கால சமுதாயத்தை நோயற்ற

ஆரோக்கியமானவர்களாக மாற்ற முடியும் என புதுக்கோட்டையில் நடைபெற்ற கருத்தரங்கில் இயற்கை வேளாண்மை விஞ்ஞானி நம்மாழ்வார் பேசினார்.

புதுக்கோட்டையில் நேற்று நபார்டு, ரோஸ் தொண்டு நிறுவனம் இணைந்து நடத்திய உழவர் மன்ற உறுப்பினர்களுக்கு பாரம்பரிய நெல் ரகங்கள், சிறுதானியம் குறித்த மாவட்ட அளவிலான கருத்தரங்கம் நடைபெற்றது. இவ்விழாவிற்கு நபார்டு வங்கி துணை பொது மேலாளர் ஆனந்த் தலைமை வகித்தார். விழாவில் இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு கண்காட்சி மற்றும் பாரம்பரிய உணவுத் திருவிழாவை தொடக்கி வைத்து பேசியதாவது: பொதுவாக விவசாயத்துக்கு நெல்லின் வருவாய் மட்டுமே கணக்கிடப்படுகிறது. வைக்கோல் மதிப்பை சேர்ப்பதில்லை. கால்நடைகளின் முக்கியமான உணவாதாரம் வைக்கோல்தான். ஆனால், தற்போதுள்ள நவீன குட்டை நெல் ரகங்களால் வைக்கோலும் கிடைப்பதில்லை. வறட்சியையும் தாங்குவதில்லை. இதனால் விவசாயிகளுக்கும் தாங்க முடியாத சுமை ஏற்படுகிறது என்ற நிலை மறுபக்கம் நீடிக்கிறது.

இதை மாற்றும் வலிமை பாரம்பரிய இயற்கை வேளாண்மைக்கு மட்டுமே உள்ளது என்பது தற்போது நிரூபிக்கப்பட்டு வருகிறது. இந்த வேளாண்மையைப் புறக்கணிப்பது தொடருமானால் அரிசி கிடைக்காத நிலை வரும். உணவுக்கு உத்தரவாதம், ஊட்டச்சத்து உள்ள இயற்கை வேளாண் மையை புறக்கணித்தால் வரப்போகிற ஆபத்தை அரசு உணரவில்லை என எண்ணத் தோன்றுகிறது.

பாரம்பரிய நெல் ரகம், பாரம்பரிய தானிய வகைகள் பயன்பாட்டில் இருந்த காலம் வரை மக்களுக்கு நோய் எதிர்ப்பு சக்திக்கான ஊட்டச்சத்து கிடைத்து வந்தது. நோய்களும் குறைவாகவே இருந்தது. ஆனால், இன்றைய அவசர உலகில், பாரம்பரிய உணவு வகைகள் மறைந்து போய், நார்ச்சத்து இல்லாத துரித உணவுக்கு மக்கள் மாறிவிட்டதால் நோய்கள் அதிகரித்துவிட்டது.எனவே இந்த நிலையை மாற்ற விவசாயிகள்தான் அதற்கு மாற்றாக திகழ வேண்டும். பாரம்பரிய உணவு, தானிய, பயறு வகைகளை பயிரிட்டு பயன்பாட்டுக்கு மக்களிடம் கொண்டு செல் வதன் மூலம் வருங்கால சமுதாயத்தை நோயற்ற ஆரோக்கியமானவர்களாக மாற்ற முடியும் என்றார்.நிகழ்ச்சியில் திருமங்கலம் பாமயன், மாவட்ட வழங்கல் விற்பனை சங்க மேலாளர் சத்தியசீலன், இயற்கை விவசாயிகள் தனபதி, அப்பாவுபாலாண்டார், மரம்தங்கசாமி, அகிலா, ஞானபிரகாசம், வீராண்டான், பொன். சுந்தரேசன், ஜீவானந்தம், அன்பழகன், ரகுபதி, காமராசு உள்பட பலர் கலந்து கொண்டனர். முன்னதாக ரோஸ் தொண்டு நிறுவன இயக்குநர் ஆதப்பன் வரவேற்றார். முடிவில் நிர்வாகி விஜயா நன்றி கூறினார்.

### பழம், காய்கறியை விட காளானில் புரதச்சத்து அதிகம் வேளாண் அதிகாரி தகவல்

நாகை, : பழம், காய்கறியை விட காளானில் அதிக புரதச்சத்து உள்ளது என்று வேளாண் தொழில்நுட்ப வல்லுனர் வெங்கடாசலம் தெரிவித்தார்.

நாகையில் உணவு காளான் உற்பத்தி தொழில்நுட்பங்கள் குறித்த ஒரு நாள் பயிற்சி முகாம்

நடந்தது. முகாமை துவக்கி வைத்து வேளாண் தொழில்நுட்ப வல்லுனர் வெங்கடாசலம் பேசியதாவது: நாளுக்குநாள் பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப புரதச்சத்து மிகுந்த உணவு தேவையை நிவர்த்தி செய்வதில் காளான் பெரும்பங்கு வகிக்கிறது. உலர்ந்த காளானில் 20 முதல் 30 சதம் அளவிற்கு புரதச்சத்து உள்ளது. இது காய்கறி, பழங்களில் உள்ள புரதச்சத்தைவிட அதிகமாகும். மேலும் இதில் லைசின், ட்ரிப்டோபேன் போன்ற அமினோ அமிலங்களும், பி மற்றும் சி வைட்டமின்களும் அதிகளவில் காணப்படுகிறது. தமிழ்நாட்டில் மொட்டு காளான், சிப்பிக்காளான் வகைகள் அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகிறது.

காளான் வளர்ப்பு, கிராம மக்களின் குறிப்பாக பண்ணை மகளிர், மகளிர் சுய உதவிக்குழு போன்றோரின் நேரத்தை பயனுள்ளதாக மாற்றி நல்ல வருமானத்தை ஈட்டி கொடுத்து மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த உதவுகிறது. மேலும் காளான் கழிவு, மண்புழு உரம், தயாரிக்கவும், காளானிலிருந்து மதிப்பு கூட்டுப்பொருளாக காளான் ஊறுகாய், சூப்பு பொடி, வடகம் போன்ற பொருட்களை தயாரித்து வருமானம் ஈட்ட முடியும். இவ்வாறு அவர் பேசினார்.

முகாமில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

### காரைக்கால் விவசாயிகளுக்கு ஓரிரு நாளில் வறட்சி நிவாரணம் வழங்கப்படும் புதுச்சேரி

### வேளாண் அமைச்சர் சந்திரகாசு தகவல்

காரைக்கால், : வறட்சியால் பாதிக்கப்பட்ட காரைக்கால் மாவட்ட விவசாயிகளுக்கு இன்னும் ஓரிரு நாளில் முதல்வர் அறிவித்தப்படி வறட்சி நிவாரணம் வழங்கப்படும் என்று புதுச் சேரி வேளாண் அமைச்சர் சந்திரகாசு தெரிவித்துள்ளார்.

காரைக்கால் கோட்டுச் சேரி தூய சகாய அன்னை சமுதாய கூடத்தில் மாவட்ட குடிமைப்பொருள் வழங்கல்துறை சார்பில் உலக நுகர்வோர் தினவிழா கொண்டாடப்பட்டது. புதுச்சேரி வேளாண் அமைச்சர் சந்திரகாசு தலை மை வகித்தார். குடிமைப்பொருள் வழங்கல்துறை துணை இயக்குனர் நாகராஜன் முன்னிலை வகித்தார். விழாவை துவக்கி வைத்து அமைச்சர் சந்திரகாசு பேசியதாவது: என்.ஆர் காங்கிரஸ் முதல் வர் ரங்கசாமி தலைமையி லான இந்த அரசு புதுச்சேரி, காரைக்கால் மக்கள் என பிரித்து பார்க்காமல் மக்கள் நலத்திட்டங்களை சிறப்பாக செய்து வருகிறது. குறிப்பாக காரைக்கால் மாவட்ட மக்களுக்காக இங்குள்ள 5 எம்எல்ஏக்களின் கருத்துகளுக்கு மதிப்பு கொடுத்து அவர்கள் கேட்கும் வளர்ச்சி நிதிகளை முதல்வர் தாராளமாக வழங்கி வருகிறார். மழை, காவிரி நீர் இல்லாமல் பொய்த்துபோன காரைக் கால் மாவட்ட விவசாயிகள் நலன்கருதி ஹெக்டேருக்கு ரூ.20 ஆயிரம் நிவாரணம் அறிவித்துள்ளார். அந்த நிவாரணம் இன்னும் ஓரிரு நாளில் முதல்வர் அறிவித்தப்படி வழங்கப்படும் என்றார்.பின்னர் தரமான பொருளும், நிறைவான சே வையும் மக்களை சென்ற டைய பெரிதும் தேவைப்படுவது நுகர்வோர் விழிப்புணர்வா அல்லது சட்டத்தின் கண்காணிப்பா என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது. இதில் கவிஞர்

நந்தலாலா தலைமையில் வாசுகி ஜெயராமன், முனை வர் காளிதாஸ், வைஜெயந்திராஜன், ஆனந்தகிருஷ்ணன் ஆகியோர் வாதிட்டனர். விழாவில் நுகர் வோர் சங்கங்களை சேர்ந்த நல்லுசாமி, பாரிஸ்ரவி, பக்கிரிசாமி உள்ளிட்ட பலர் கலந்து கொன்டனர். குடிமைப்பொருள் அதிகாரி ராஜாமதிவர்மா நன்றி கூறினார்.

### எரிமலைகள் எவ்வாறு உருவாகின்றன என்பது உங்களுக்கு தெரியுமா?....

நிலத்தின் அடியில் கீழே போகப்போக வெப்பநிலை அதிகரிக்கிறது. நிலத்தின் மேல் மட்டத்தில் இருந்து 30 கிலோமீட்டருக்கு அடியில் செல்லும் போது அங்கு இருக்கும் வெப்பம் சாதாரண பாறைகளை கூட உருக்கும் அளவில் இருக்கும். இவ்வாறு நிலத்தின் அடியில் உள்ள பாறைகள் உருகும்போது அவை விரிவடைகின்றன. திரவ உருவான இப்பாறைகளை மாக்னா என்கிறார்கள். இவ்வாறு வெப்பநிலை காரணமாக உருவாகும் மாக்னா எனப்படும் பாறைக்குழம்பு ஒரு கட்டத்திற்கு மேல் நிலத்தின் அடியில் ஏற்படும் இடநெருக்கடி காரணமாக இருந்து உண்டாகும் அளவிடற்கரிய வெப்பம் நிலத்தை பீறிட்டு வெளிவருவதற்காக அலைமோதுகிறது. அப்போது பூமியில் எப்பகுதியாவது வலிமை குன்றியிருந்தால் அப்பகுதி பிளந்து அதிலிருந்து உஷ்ணவாயுக்களும், திரவ உருவான பாறைகளும், பாறைத்துகள்களும் வெளிக்கிளம்புகின்றன. இதைத்தான் எரிமலை வெடித்தல் என்கிறோம். பீறிட்டு வரும் புகையும், சாம்பலும் கல் துண்டுக ளும் சேர்ந்து லாவா எனப்படும் குழம்பாகின்றன. குளிர்ச்சியடையும்போது மலையுருக்கொள்கிறது. உள்ளுக்குள்ளே உருகிய பொருட்கள் அனைத்தும் வெளி வரும் வரையில் தீயும், புகையும் தொடர்ந்து வழிந்து கொண்டேஇருக்கின்றன. லாவா நின்றுவிட்டால் அதனை இறந்த எரிமலை என்கிறார்கள். தற்சமயம் உலகத்தில் 450 எரிமலைகள் உள்ளன. இந்தியாவில் எரிமலைகள் மிகப்பெரியவை. மிகவும் உயரமான எரிமலை அர்ஜென்டினாவில் உள்ளது. இதன் உயரம் 22 ஆயி ரத்து 834 மீட்டர். அதாவது 60, 960 அடி.

### சின்னமனூர் பகுதியில் 300 ஏக்கரில் 2ம் போக நெல் அறுவடை பணிகள் தீவிரம்

சின்னமனூர், : சின்னமனூர் பகுதியில் 300 ஏக்கரில் இரண்டாம்போக நெல் அறுவடைப்பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது.

சின்னமனூர் மற்றும் அதனை சுற்றியுள்ள குச்சனூர், மார்க்கயன்கோட்டை, வேம்படிகளம், சீலையம்பட்டி முத்துலாபுரம் விலக்கு உள்ளிட்ட இடங்களில் முல்லைபெரியாற்றின் பாசனத்தை பயன்படுத்தி வருடத்தில் இருபோக நெல் விவசாயம் நடக்கிறது. பருவமழை பெய்யாததால் நீர்பிடிப்பு பகுதிகளில் தண்ணீர் தேக்கம் குறைவாக இருந்தது. அணையில் தண்ணீர் தாமதமாக திறக்கப்பட்டது. இதனால் கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் 15 ஆயிரம் ஏக்கரில் 4 ஆயிரம் ஏக்கர் மட்டுமேதான் முதல் போகம் நடவு செய்து அறுவடை செய்யப்பட்டது.

திடீரென பெய்த மழையால் அணையில் நீர்மட்டம் உயர்ந்தது. அணையில் திறக்கப்பட்ட நீரால்

குளம் கண்மாய்களுக்கு நீர்வரத்து அதிகரித்தது. இதையடுத்து, இரண்டாம் போகத்திற்காக பரவலாக நெல் நடவு பணி துவங்கியது. சின்னமனூர் பகுதியில் 4 ஆயிரம் ஏக்கரில் 3 ஆயிரத்து 700 ஏக்கர் வரையில் அறுவடை முடிந்து விட்டது. 300 ஏக்கரில் மட்டும் நெல் வளர்ச்சி இருந்ததால் அறுவடைக்கு தாமதமானது.

நெல்மணிகள் தற்போது அறுவடைக்கு தயாரானதால் சில நாட்களாக அறுவடை பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. ஒரு ஏக்கருக்கு சாதாரணமாக 60 மூடைகள் கிடைக்கும். ஆனால், தற்போது 38 லிருந்து 40 மூடைகள் மட்டுமே கிடைக்கிறது. 61 கிலோ கொண்ட நெல் மூடை ரூ.900 என விலை போகிறது. கடந்த ஆண்டு ரூ. ஆயிரத்திற்கு விலை போனது. சின்னமனூர் மார்க்கயன்கோட்டை பகுதியில் 2 நாட்களில் முற்றிலும் நெல் அறுவடை பணிகள் முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது

மாட்டுத்தீவனம் உற்பத்திக்கு மானிய நிதியுதவி விநியோகம்

தளவாய்புரம் : தளவாய்புரம் அருகே 7 கிராம விவசாயிகளுக்கு மாட்டுத்தீவனம் வளர்க்க அரசின் மானிய நிதியுதவி விநி யோகம் செய்யப்பட்டது.

தளவாய்புரம் அருகே மீனாட்சிபுரம், தெற்கு மீனாட்சிபுரம் உள்பட 7 கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் 30 பேர், தமிழ்நாடு தீவன அபிவிருத்தி திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்களின் வயல்களில் கறவை மாட்டு தீவனம் வளர்ப்பதற்கு முழு மானியத்துடன் கடந்த மாதம் விதைகள் வழங்கப்பட்டன. அதனை விவசாயிகள் வளர்ப்பதற்கு ஏக்கருக்கு ரூ.5 ஆயிரத்து 200 வீதம் வழங்கப்படுகிறது.

இதற்கான காசோலை விநியோகம், மீனாட்சிபுரம் ஊராட்சி அலுவலகத்தில் ஊராட்சி தலைவர் கதிரேசன் தலைமையில் நடைபெற்றது. துணைத்தலைவர் மனோரஞ்சிதம் முன்னிலை வகித்தார். கால்நடை உதவி மருத்துவர் பிரபாகரன் வரவேற்றார். எம்எல்ஏ கோபால்சாமி 30 பேருக்கும் மானியத்திற்கான காசோலையை வழங்கி பேசினார். ஒன்றிய கவுன்சிலர்கள் பெரியாண்டவர், பொன்னுலட்சுமி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## காவிரி, பவானி ஆறுகளில் இருந்து முறைகேடாக தண்ணீர் உறிஞ்சுவதால் கடைமடை பாசனம் கடும் பாதிப்பு

ஈரோடு, : கீழ்பவானி முறைநீர் பாசன விவசாயிகள் கூட்டமைப்பு தலைவர் காசியண்ணன், செயலாளர் வடிவேல், தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாநில தலைவர் கே.சி.ரத்தினசாமி, கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்கத்தலைவர் நல்லசாமி ஆகியோர் கூறியதாவது:

காவிரி, பவானி, அமராவதி ஆறுகளின் கரைகள் மற்றும் பாசன வாய்க்கால்களில் நூற்றுக்கணக்கான மின்மோட்டார்கள் அமைக்கப்பட்டு முறைகேடாக தண்ணீரை உறிஞ்சி நீரேற்று பாசனம் நடைபெற்று வருகிறது. இவற்றில் சில அனுமதி பெற்றவையாக இருப்பினும், பெரும்பாலானவை முறை தவறி பொருத்தப்பட்ட மின்மோட்டார்களே ஆகும். இவைகளில் பல இடங்களில் 3 எச்.பி., மின்மோட்டார்கள் பொருத்துவதற்கு மட்டுமே அனுமதி பெற்றுள்ளன. இன்னும் சில இடங்களில் ஆயில் என்ஜின், மின் மோட்டார்களை பொருத்தி மெகா சைஸ் உறிஞ்சி குழாய்கள் மூலம் அனுமதிக்கப்பட்ட அளவை விட கூடுதலாக தண்ணீர் உறிஞ்சப்படுகின்றன.

இப்பாசனத்துக்கு அரசு உத்தரவாதம் அளிக்காத நிலையில் இவற்றை எந்த நேரத்திலும், எந்நிலையிலும் அப்புறப்படுத்தும் அதிகாரம் அரசுக்கு உண்டு. மேலும் பருவமழைக் காலமான ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் மட்டுமே ஆற்றில் இருந்து நீர் இறைத்து கொள்ளலாம் என்ற நிபந்தனையும் உள்ளது. மேலும் தண்ணீர் உறிஞ்சும் இடத்தில் பூட்டு போட்டு தடைப்படுத்தும் வழிவகையும் இருக்க வேண்டுமென்பதும் முக்கிய நிபந்தனையாக உள்ளது.

இதேபோல ஆயக்கட்டு நிலங்களுக்கு தண்ணீர் தட்டுப்பாடு இருக்கும் நேரத்தில் நீர் இறைக்க கூடாது என்பன உள்ளிட்ட பல்வேறு விதிமுறைகள் உள்ளன. ஆனால் இந்த நிபந்தனைகள் எதுவும் கடை பிடிக்கப்படுவது இல்லை. ஆண்டுதோறும் இப்பாசனதாரர்கள் குடிநீருக்காக விடும் தண்ணீரை கூட விடாமல் உறிஞ்சுகின்றனர். இவ்வாறு உறிஞ்சப்படும் தண்ணீர் பூமிக்கடியில் புதைக்கப்பட்ட குழாய்கள் மூலம் சுமார் 10 கிலோ மீட்டருக்கு அப்பால் கூட கொண்டு செல்லப்படுகிறது. இவ்வாறு முறைகேடாக நடைபெறும் நீரேற்று பாசனங்களால் முறையான பாசனநிலங்கள் பாதிக்கப்படுவதுடன், வாய்க்கால் மற்றும் ஆற்றின் கடைமடை பகுதிகளுக்கு முழுமையாக தண்ணீர் கிடைக்காத நிலை ஏற்படுகிறது.

நீரேற்று பாசனங்களால் கடைமடை பாசனஉரிமைகள் பாதிக்கப்படுகிறது. பற்றாக்குறை நிலவும் காலங்களில் கடைக்கோடி பாசனங்களுக்கு தண்ணீர் கொண்டு செல்வதை தடுத்து நிறுத்த அரசும், பொதுப்பணித்துறையினரும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அனுமதியில்லாத நீரேற்று பாசனங்களையும், அனுமதிக்கப்பட்ட நீரேற்று பாசனங்களையும் அரசு ஒழுங்குபடுத்தி கடைமடை நீர்பாசன உரிமைகளை அரசு பாதுகாக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

## மின்வெட்டு பிரச்னையால் விவசாயமும் நெசவு தொழிலும் தமிழகத்தில் அழிந்து வருகிறது

ஈரோடு, : தமிழக சட்டமன்றத்தில் கேள்வி கேட்ட எதிர்கட்சி கொறடாவும், ஈரோடு கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ.வுமான சந்திரகுமார் உள்ளிட்ட 6 எம்.எல்.ஏ.க்களை 6 மாதம் பதவி நீக்கம் செய்ததைக் கண்டித்து ஈரோடு மாவட்ட தேமுதிக சார்பில் நேற்று முன்தினம் இரவு ஈரோடு காளைமாடு சிலை அருகில் பொதுக்கூட்டம் நடந்தது. கொள்கைபரப்பு செயலாளரும் எம்எல்ஏவுமான வி.சி.சந்திரகுமார் வரவேற்றார். பொதுக்கூட்டத்திற்கு தலைமை தாங்கி பிரேமலதா விஜயகாந்த் பேசியதாவது:

ஒரு தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் சட்டசபைக்கு எதற்கு செல்கிறார்? தொகுதி மக்களுக்கு ஏதாவது நல்லது செய்ய வேண்டும், தொகுதி பிரச்னையை தீர்க்க வேண்டும் என்று தான் செல்கிறார்கள். ஆனால் சட்டசபையில் எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.க்களை பேச அனுமதிப்பதில்லை. மைக்கை ஆப் செய்து விடுகிறார்கள். இல்லையென்றால் சட்டசபை காவலர்களைக் கொண்டு அவர்களை வெளியேற்றுகிறார்கள்.

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் 3 மாதத்தில் மின்வெட்டு பிரச்னையை தீர்ப்பதாக கூறி முதல்வர் ஜெயலலிதாஆட்சிக்கு வந்தார். ஆனால் 3 ஆண்டுகள் ஆன நிலையிலும் மின்வெட்டு பிரச்னையை அவர் தீர்க்கவில்லை. தமிழகத்தில் தற்போது 18 மணி நேரம் மின்வெட்டு ஏற்படுகிறது. இதுதான் இந்த அதிமுக அரசின் சாதனையாக உள்ளது.

ஈரோடு பகுதியில் பாதாள சாக்கடைக்காக நல்ல ரோடுகளை தோண்டி குண்டும், குழியுமாக இருக்கிறது. கரும்புக்கு 2,500 ரூபாய் கொடுப்பதாக தேர்தல் வாக்குறுதியில் கூறிய ஜெயலலிதா அதை கொடுத்தாரா?. டெல்டா மாவட்டங்களில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 25 ஆயிரம் ரூபாய் கொடுப்பதாக கூறினார்கள். தமிழகம் முழுவதுமே வறட்சியால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அனைத்து விவசாய குடும்பங்களுக்கும் நிவாரண உதவிதொகையை வழங்க வேண்டும். மின்வெட்டு பிரச்னையால் விவசாயமும், நெசவு தொழிலும் அடியோடு அழிந்து வருகிறது. எதற்கெடுத்தாலும் மத்திய அரசை குறை கூறுவதிலேயே முதல்வர் ஜெயலலிதா கவனம் செலுத்தி வருகிறார். உங்களால் செய்ய முடியவில்லை என்றால் ஆட்சியை விட்டு இறங்கி ஜனாதிபதி ஆட்சிக்கு வழிவிடுங்கள். மண்ணெண்ணெய் அளவை குறைத்ததாக மத்திய அரசு மீது ஜெயலலிதா பழிபோடுகிறார்.காஸ் அதிகமாக வழங்கியதால் தான் மண்ணெண்ணெய் அளவை குறைத்துள்ளார்கள். இது கூட ஜெயலலிதாவிற்கு தெரியாதா?. இந்த அதிமுக ஆட்சியின் ஒரே சாதனை டாஸ்மாக் கடைகள் மூலமாக 22 ஆயிரம் கோடி ரூபாய்

வருமானத்தை ஈட்டியது தான். மக்களின் ரத்தத்தை உறிஞ்சி இலவச திட்டங்களை காட்டி மக்களை ஏமாற்றி வருகிறார். மக்கள் தான் ஒரு மாற்றத்தை உருவாக்க வேண்டும். இருண்ட தமிழகத்தை மாற்றி விட்டு அதற்கு பிறகு பிரதமர் பதவிக்கு பகல் கனவு காணுங்கள்.

சட்டமன்றத்தில் துரோகிகள் கேலி செய்து பேசியபோது சந்திரகுமார் எம்.எல்.ஏ. உட்பட 6 எம்.எல்.ஏ.க்கள் தட்டி கேட்டார்கள். இதற்காக எம்.எல்.ஏ.க்களை சஸ்பெண்ட் செய்தது தொகுதி மக்களையே அவமானப்படுத்தியதற்கு சமம்.

வரும் பார்லிமென்ட் தேர்தலில், நீங்கள் செய்த மின்வெட்டு, பால், பஸ்கட்டண உயர்வு போன்றவற்றை கூறி ஓட்டு கேட்க முடியுமா? பார்லிமென்ட் தேர்தலில் நீங்கள் 4 தொகுதிகளில் கூட வெற்றி பெற முடியாது. 72 திட்டங்களுக்கு பலகோடி ரூபாய் ஒதுக்கியுள்ளார்கள். ஆனால் ஒரு வேலையாவது நடந்ததா?.

2009ம்ஆண்டு நாடாளுமன்ற தேர்தலின்போது இலங்கையில் போர் உச்சத்தில் இருந்தது. அப்போது விஜயகாந்த் அனைத்து கட்சிகளும் சேர்ந்து தேர்தலை புறக்கணித்து மத்திய அரசுக்கு பாடம் புகட்டுவோம் என்றார். ஆனால் கேலி பேசினார்கள். இன்று இலங்கை தமிழர்களுக்காக நடிக்கிறார்கள். ஜெயலலிதா அரசு செய்து வரும் கொடுமைகளை சிந்தித்து நீங்கள் ஒரு மாற்றத்தை கொண்டு வரவேண்டும்.

இவ்வாறு பிரேமலதா விஜயகாந்த் பேசினார்.

இந்த கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் சேந்தமங்கலம் சாந்திராஜமாணிக்கம், கெங்கவள்ளி சுபாரவி, மாநில மகளிரணி செயலாளர் டாக்டர் சிவகாமி முத்துக்குமார், மாநில மகளிரணி துணை செயலாளர்கள் டாக்டர் கண்ணகி ராஜ்குமார், சந்திரா, சுபமங்களம், தெற்கு மாவட்ட செயலாளா இமயம் சிவக்குமார், வடக்கு மாவட்ட செயலாளர் செந்தில்குமார், தெற்கு மாவட்ட துணை செயலாளர்கள் கோபால், ஏசையன், தனசண்முகமணி, ரமேஷ், வடக்கு மாவட்ட பொருளாளர் சாந்தப்பன், மாவட்ட துணை செயலாளர்கள் குமார், கோபால், அய்யாதுரை, சிவக்குமார், மாவட்ட மகளிரணி செயலாளர் சாமியாத்தாள், மகளிரணி மாவட்ட துணை செயலாளர்கள் மேகலா, தாமரைச்செல்வி, சாந்தி ஆனந்த், செல்வி, வடக்கு மாவட்ட மகளிரணி செயலாளர் ருக்மணி பழனிச்சாமி, துணை செயலாளர்கள் பூங்கொடி, பிரேமலதா, கவிதாராஜன், சுசீலா, மாவட்ட அவைத்தலைவர் பொன்சேர்மன், மாவட்ட தொழிற்சங்க தலைவர் கணேசன், மாவட்ட செயலாளர் பூபதி, பி.பெ.அக்ரஹாரம் பகுதி செயலாளர் நைனாமலை, மாநில நெசவாளர் அணி துணை செயலாளர் சுப்பிரமணி, அவைத்தலைவர் ராசு குமாரசாமி,, மாவட்ட நிர்வாகிகள் கொடிவேரி சிவக்குமார், பிரபாகர், ரவிகுமார், சஜித், 4வாமணி, சென்னியப்பன், ஈஸ்வரமூர்த்தி,

சுப்பிரமணி, ரமேஸ், விஸ்வநாதன், வாசு, சங்கர், பாலாஜி, சிவக்குமார், ரமேஸ்செல்வன், கந்தசாமி, சின்னகுஞ்சான், கணேஸ், சசிகுமார், சரவணன், சண்முகம், ஒன்றிய செயலாளர்கள் சோலைக்கவுண்டர், நடராஜன், சிவன்மூர்த்தி, ஆறுமுகம், மாதேவன், பொன்னுசாமி, சம்பத், தங்கவேல், நகர செயலாளர்கள் தாமோதரசாமி, பூக்கடை சரவணன், சக்திவேல், மற்றும் பேரூராட்சி, களை கழக நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் தெற்கு மாவட்ட பொருளாளர் நமச்சிவாயம் நன்றி கூறினார்.

### கறவை மாடுகள் வாங்க ரூ37.60 லட்சம் கடன்

சத்தியமங்கலம்,: புஞ்சைபுளியம்பட்டி ஆந்திரா வங்கி, பிரஸ் பால் டெய்ரி சார்பில் நபார்டு வங்கி விவசாய திட்டத்தின்கீழ் மானியத்தில் கறவை மாடுகள் வாங்க கடன் வழங்கும் விழா நடைபெற்றது. வங்கி வளாகத்தில் நடந்த விழாவிற்கு கிளை மேலாளர் பாண்டியராஜன் தலைமை தாஙகினார். விவசாய அதிகாரி கவுதம்ராஜ் முன்னிலை வகித்தார்.

இதில் புஞ்சைபுளியம்பட்டி சுற்றுவட்டாரத்தில் உள்ள பெரிய கள்ளிப்பட்டி, பனையம்பள்ளி, நொச்சிகுட்டை, அணையப்பாளையம், மாரம்பாளையம் உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த 200 விவசாயிகளுக்கு ரூ.37.60 லட்சம் மதிப்பில் கறவை மாடுகள் வாங்க கடன் வழங்கப்பட்டது. இதில் 25 சதவீதம் மானியமாகும். முடிவில் கால்நடை மருத்துவர் சரவணன் நன்றி கூறினார்.

### விவசாயிகளுக்கு ஆடு வளர்ப்பு பயிற்சி

நாமக்கல்,: பெஸ்ட் தொண்டு நிறுவனம் சார்பில் தர்மபுரியை சேர்ந்த விவசாயிகளுக்கு நாமக்கல்லில் ஆடு வளர்ப்பு குறித்து 2 நாள் பயிற்சி அளிக்கப்பட்டது. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கிருஷ்ணராஜ், முன்னோடி வங்கி மேலாளர் அறிவழகன், உதவிபொது மேலாளர் பூவராகவன் ஆகியோர் பயிற்சி அளித்தனர். பெஸ்ட் நிறுவன தொழில்நுட்ப ஆலோசகர் துரை, ஓய்வுபெற்ற வேளாண்மை இணை இயக்குனர்கள், கால்நடை இணை இயக்குனர்கள் இதில் கலந்து கொண்டு பயிற்சி அளித்தனர்.

விவசாயிகளுக்கு ஆடு வளர்ப்பு கண்காட்சியும், செயல் விளக்கமும் அளிக்கப்பட்டது. உயர் இன ஆடு வளர்க்கும் அபி ஆட்டு பண்ணைக்கு விவசாயிகள் அழைத்து செல்லப்பட்டு செம்மறி ஆடு வளர்ப்பு குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது. வேளாண்மை இயந்திரங்கள் செயல்படும் விதம், தீவனம் புல் வளர்க்கும் விபரங்கள் இந்த பயிற்சியின் போது விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

இன்றைய வேளாண் செய்திகள்
1.04.2013 A.M

## நக்சல் பாதிப்பு கிராமத்தில் 175 பேருக்கு முழு மானியத்துடன் விவசாய உபகரணங்கள் வழங்கல்

தர்மபுரி, : தர்மபுரி அருகே, நக்சல் பாதிப்பு கிராமத்தில் 175 பேருக்கு முழு மானியத்துடன் விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டது.

தர்மபுரி மாவட்ட எஸ்பி ஆஸ்ராகர்க் உத்தரவின் பேரில், மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டு திட்டத்தின் கீழ், காரிமங்கலம் ஊராட்சியில் பூமாண்டஅள்ளி, பைசுஅள்ளி பஞ்சாயத்திற்குட்பட்ட நக்சலைட் பாதிக்கப்பட்ட கிராமங்களில் உள்ள ஏழை விவசாயிகள் பயன்பெறும் வகையில், முழுமானியத்துடன் 175 பேருக்கு விவசாய உபகரணங்கள் தலா ஒரு மண்வெட்டி, கடப்பாறை, பிக்காஸ், 2 இரும்பு பாண்டம் ஆகியவை வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்கு காரிமங்கலம் வட்டார வளர்ச்சி அலுவலர் முகமதுஅலி தலைமை வகித்து, உபகரணங்களை வழங்கினார். விழாவில் தர்மபுரி நக்சலைட் தனிப்பிரிவு இன்ஸ்பெக்டர் ஹயாத், மதிகோண்பாளையம் இன்ஸ்பெக்டர் சுபாஷ், எஸ்எஸ்ஐ அருண், ஏட்டு பழனி, கவிதா நாகராஜ், கோபி மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.

## மானிய விலையில் கால்நடைகளுக்கு தீவனம் வழங்கும் பணி

திருச்சி, : ஸ்ரீரங்கம் தொகுதி புங்கனூரில் பால் உற்பத்தியாளர்களுக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலம் மானிய விலையில் கால்நடை தீவனம் வழங்கும் பணியை அமைச்சர் பூனாட்சி தொடங்கி வைத்தார்.

காவிரி டெல்டா மாவட்டங்களான திருச்சி, கரூர், அரியலூர், புதுகை, நாகை, திருவாரூர், தஞ்சை மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களில் தற்போது வறட்சி ஏற்பட்டுள் ளது. இதையடுத்து பால் உற்பத்தியாளர்களுக்கு பால் உற்பத்தியாளர் கூட் டுறவு சங்கங்கள் மூலம் ரூ. 11.62 கோடி மானியத்தில் கால்நடை தீவனம் மற்றும் ரூ. 3.38 கோடி மானியத்தில் தாது உப்புக்கலவை என ரூ. 15 கோடி நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

திருச்சி மாவட்டத்தில் 282 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களில் 18,732 உறுப்பினர்கள் மூலம் 30,813 கறவைப்பசுக¢கள் மூலம் பால் கொள்முதல் நடக்கிறது. இக்கால்நடைகளுக்கு நாள்

ஒன்றுக்கு ரூ. 1.23 லட்சம் மானியத்தில் கால்நடை தீவனமும், ரூ. 38,500 மானியத்தில் தாது உப்புக்கலவையும் என மொத்தம் ரூ. 1.61 லட்சம் மானியத்தில் தீவனம் தரும் பணி தொடங்கப்பட்டது. தமிழக முதல்வர் உத்தரவின்பேரில், திருச்சியில் ஸ்ரீரங்கம் தொகுதி புங் கனூர் கிராமத்தில் நடந்த நிகழ்ச்சியில் அமைச்சர் பூனாட்சி கால்நடை தீவ னம் மற்றும் தாதுஉப்புகலவை வழங்கும் பணியை துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் அரசு தலைமை கொறடா மனோ கரன், கலெக்டர் ஜெயஸ்ரீ, எம்.பி. குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### பால் உற்பத்தியில் தமிழகம் முன்னிலை அமைச்சர் பேச்சு

காரைக்குடி, : இலவச மாடு வழங்கும் திட்டத்தால் பால் உற்பத்தியில் தமிழகம் முன்னிலையில் உள்ளதாக அமைச்சர் ராஜேந்திர பாலாஜி தெரிவித்தார்

காரைக்குடியில் அதி முக சார்பில் பட்ஜெட் விள க்க பொதுக்கூட்டம் நடந்தது. சோழன்சித பழனிச்சாமி எம்எல்ஏ தலைமை வகித் தார். நிகழ்ச்சியில் செய்தி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமை ச்சர் ராஜேந்திர பாலாஜி பேசுகையில், ‘தமிழக அரசு வரியில்லாத, வரி உயர்வு இல்லாத பட்ஜெட்டை மக்களுக்காக வழங்கி உள்ளது. மாணவர்களுக்கு இலவச லேப்டாப் வழங்க ரூ.1500 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த 2 ஆண்டுகளில் 1.20 லட்சம் மாடுகள் வழங்கப்ப ட்டுள்ளன. இந்த நிதி ஆண் டில் 60 லட்சம் கறவை மாடு களும், 1.50 லட் சம் பயனாளிகளுக்கு 6 லட் சம் ஆடுகள் வழங்கப்பட உள்ளது. இல வச கறவை மாடுகள் திட்ட த்தால் தமிழகம் பால் உற்பத் தில் முன்னிலையில் உள்ளது’ என்றார். நிகழ்ச்சியில் நகர்மன்ற தலைவர் கற்பகம் இளங் கோ, முன்னாள் எம்எல்ஏ உமாதேவன், மாவட்ட செய லாளர் முருகானந்தம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### கரும்பு விவசாயிகள் ஆலோசனை கூட்டம்

காஞ்சிபுரம், : உத்திரமேரூர் வட்டார கரும்பு விவசாயிகளின் ஆலோசனை கூட்டம் உத்திரமேரூரில் நடந்தது. திமுக மாவட்ட அமைப்பாளர் சோழனூர் ஏழுமலை தலைமை வகித்தார். உத்திரமேரூர் ஒன்றிய செயலாளர் இரா.நாகன் வரவேற்றார். பேரூராட்சி தலைவர் சுமதி குணசேகரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில், காமராஜர் ஆட்சி காலத்தில் கொண்டு வரப்பட்ட படாளம் கூட்டுறவு சர்க்கரை ஆலை, அதிக உறுப்பினர்களுடன் செயல்பட்டது. அப்போது உத்திரமேரூர் தாலுகா இதனுடன் இணைக்கப்பட்டது. திடீரென படாளம் ஆலை மூடப்பட்டால், பழைய சீவரத்திலுள்ள எஸ்பிஎஸ் தனியார் சர்க்கரை ஆலையுடன் உத்திரமேரூர் இணைக்கப்பட்டதால் கரும்பு விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். உத்திரமேரூர் பகுதியை படாளம் சர்க்கரை ஆலையுடன் இணைக்கவேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## விவசாயிகளுக்கான விழிப்புணர்வு முகாம்

கிருஷ்ணகிரி,:கிருஷ்ணகிரி மாவட்டத்தில் விவசாயிகளுக்கான விழிப்புணர்வு பயிற்சி முகாம் மூன்று இடங்களில் நடந்தது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண்மை வணிகத்துறை மூலமாக நீர்வள நிலவளத்திட்டம் 2012-2013ன் கீழ் கிருஷ்ணகிரி ஒழுங்குமுறை விற்பனைக் கூட வளாகம், சூளகிரி வட்டம் கீரனப்பள்ளி ஆஞ்சநேயர் கோவில் வளாகம், ஓசூர் வட்டம் தட்டிகானப்பள்ளி வேளாண் வணிக வளாகம் ஆகிய மூன்று இடங்களில் விவசாயிகள் விழிப்புணர்வு முகாம் நடந்தது. இந்த முகாம்கள் ஒவ்வொன்றிலும் விவசாய விளைபொருள் குழுவினைச் சேர்ந்த 20 விவசாயிகள் கலந்துகொண்டனர். முகாமில் வேளாண்மை துணை இயக்குநர் பூபதி, வேளாண்மை அலுவலர்கள் பூர்ணமதி, அருள்தாஸ், உதவி வேளாண்மை அலுவலர்கள் சுந்தரராஜன், பெருமாள், முருகேசன் ஆகியோர் கலந்துகொண்டு பல்வேறு பயிர்களுக்கான அறுவடை பின் செய்ய வேண்டிய நேர்த்தி, விளை பொருட்களை உலர வைத்தல், ஈரப்பதம் கண்டறிதல், தரம் பிரித்தல், சந்தை விலை நிலவரம் அறிதல், விளைபொருள் குழு மூலம் நல்ல விலைக்கு விற்பனை செய்தல் குறித்து விவசாயிகளுக்கு எடுத்து கூறினர்.

எலுமிச்சங்கிரி டாக்டர் பெருமாள் வேளாண் அறிவியல் மைய உதவி பேராசிரியர் பூமதி, முகாமில் பங்கேற்று விளைபொருட்களுக்கு மதிப்பு கூட்டுதல் குறித்து எடுத்துரைத்தார்.

## திருப்பூர் வடக்கு உழவர் சந்தையில் ரூ.44கோடியே, 86லட்சத்துக்கு காய்கறிகள் விற்பனை

அனுப்பர்பாளையம்,: திருப்பூர் வடக்கு உழவர் சந்தையில் கடந்த ஒரு வருடத்தில்(1.4.2012 முதல் 31.3.2013) மட்டும் ரூ. ரூ.44கோடியே 86லட்சத்து 3 ஆயிரத்து 500 மதிப்புள்ள காய்கறிகள் விற்பனை நடைபெற்றுள்ளது.

திருப்பூர் புதிய பஸ் நிலையம் அருகே உள்ள வடக்கு உழவர் சந்தைக்கு, தினமும் அதிகாலை 3 மணிக்கே 6 அரசு பஸ்களில் சுமார் 500 விவசாயிகள் தங்களது விளை பொருள்களான அவரை, தக்காளி, கத்தரி, புடலை, பீர்க்கங்காய், பாகற்காய், சேனை, நிலக்கடலை, வாழை, வெங்காயம், கீரைவகைகள் ஆகியவறை கொண்டுவந்து விற்று செல்கின்றனர். இங்கு, பல தரப்பட்ட விவசாயிகள் விளை பொருட்களை கொண்டு வருகின்றனர். கருவலூர், நம்பியாம்பாளையம், பொகளூர், அவிநாசி, நம்பியூர், குன்னத்தூர், மலையப்பாளையம், பெருமாநல்லூர், சேவூர், கருமத்தம்பட்டி, ஊத்துக்குளி, இடுவாய் ஆகிய பகுதிகளைச்சேர்ந்த சுமார் 600 விவசாயிகள் தங்களது விளை பொருட்களான காய்கறிகளை, இங்கு கொண்டு வந்து விற்று வருகின்றனர். இங்கு நாள் ஒன்றுக்கு, சுமார் 68 டன் வரை அனைத்து காய்கறிகளும் வருகின்றன.

திருப்பூர் வடக்கு உழவர் சந்தையில், கடந்த வருடம்(1.4.2012 முதல் 31.3.2013வரை) 2கோடியே 50லட்சத்து 18 ஆயிரத்து 405 கிலோ எடையுள்ள காய்கறிகள் இங்கு மொத்த விற்பனை செய்யப்பெற்றுள்ளது.

மேலும், திருப்பூர் வடக்கு உழவர் சந்தையில், கடந்த வருடம் மட்டும், மொத்தம் 69746 விவசாயிகள் உழவர் சந்தைக்கு தங்களது விளைபொருட்களை கொண்டு வந்து விற்பனை செய்து பயனடைந்துள்ளனர்.

31 லட்சத்து 28 ஆயிரத்து, 205 பேர் இங்கு வந்து பொருட்களை வாங்கிச்சென்று பயனடைந்துள்ளனர். திருப்பூர் வடக்கு உழவர் சந்தையில் கடந்த ஒரு வருடத்தில் மொத்தம் ரூ.44கோடியே 86லட்சத்து 3 ஆயிரத்து 500 மதிப்புள்ள காய்கறிகள் விற்பனை நடைபெற்றுள்ளது.

இது தொடர்பாக, திருப்பூர் வடக்கு உழவர் சந்தை நிர்வாக அலுவலர் ராதாகிருஷ்ணன் கூறுகையில்,

''பருவ மழை பொய்த்துவிட்டதால், கிலோ ஒன்றுக்கு, வெண்டை-ரூ.20க்கும், கத்தரி-40க்கும் , புடலங்காய் ரூ.16க்கும், பாகற்காய்-ரூ 24.க்கும், தக்காளி ரூ.10க்கும், பீர்க்கங்காய்-ரூ.30க்கும், அவரைக்காய்ரூ.40க்கும் கொத்தவரைக்காய் ரூ.24க்கும், பீட்ரூட், முள்ளங்கி ரூ.20க்கும், சுரைக்காய் ரூ,.8க்கும், பூசணிக்காய்-ரூ12க்கும், சின்னவெங்காயம் ரூ.28க்கும் பெரியவெங்காயம் ரூ.20க்கும் நேற்று, திருப்பூர் வடக்கு உழவர் சந்தையில் விற்பனையானது. பச்சை மிளகாய்,, ரூ30லிருந்து ரூ.40 ஆக உயர்ந்துள்ளது. மேலும் உயர வாய்ப்புள்ளது. சென்ற வாரம், கிலோவுக்கு ரூ.40 வரை விலை அதிகளவு விற்பனையான பவானி கத்தரிக்காய் நேற்று விலை வீழ்ச்சியடைந்தது. நேற்று கிலோ ஒன்றுக்கு விலை, ரூ. 20 ஆக (அதாவது பாதியாக) குறைந்தது. இதேபோல, சென்ற வாரம் கிலோவுக்கு விலை ரூ.30 வரை விற்பனையான முருங்கைக்காய், நேற்று விலை வீழ்ச்சியடைந்து கிலோ ரூ. 15 ஆக அதாவது பாதியாக குறைந்தது. தக்காளி கிலோ ரூ. 6-க்கு விற்று வந்தது. நேற்று ரூ 11 வரை விலை உயர்ந்தது.

வெண்டைக்காய் பயிரிடுவதில் விவசாயிகள் அதிகளவு ஆர்வம் காட்டுவதில்லை. ஏனெனில், வெண்டைக்காய் பயிருக்கு போதிய அளவு தண்ணீர் அடிக்கடி விட வேண்டும், வெண்டைக்காயை தினமும் பறிக்க வேண்டும், கடுமையான வெயிலாகவும்,வறட்சியாகவும் உள்ளதால், விரைவில் செடி வாடி வதங்கிவிடுகிறது. வெண்டைக்காய் பயிரிடுவதில் விவசாயிகள் அதிகளவு ஆர்வம் காட்டுவதில்லை. இதனால் விளைச்சல் குறைந்து, வரத்தும் குறைந்து, வெண்டைக்காய் விலை தற்போது (கிலோ ஒன்றுக்கு ரூ.42) இரட்டிப்பு உயர்வுஆனது.

திருப்பூர் வடக்கு உழவர் சந்தையில், கடந்த வருடம் 7538 விவசாயிகள் இங்கு வந்து, தங்களது விளை பொருட்களான 350 டன் காய்கறிகளை கொண்டுவந்து, ரூ. 67 லட்சத்து 8ஆயிரத்து 895 மதிப்பிலான காய்கறிகளை, திருப்பூர் வடக்கு உழவர் சந்தை குளிர் பதன கிடங்கு அறையில் பாதுகாப்பாக சேமித்து வைத்து பின்னர் விற்று பயனடைந்துள்ளனர்''என்றார்.

## சாகுபடி பரப்பை அதிகரிக்க விவசாயிகளுக்கு 2 நாள் தொழில்நுட்ப பயிற்சி

கரூர், : தோட்டக்கலை சாகுபடி பரப்பை அதிகரிக்க விவசாயிகளுக்கு இரண்டு நாள் தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டது.

தோட்டக்கலை பயிரின் சாகுபடி பரப்பை அதிகரிக்கவும், உற்பத்தி திறனை உயர்த்தும் நோக்கில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தோட்டக்கலை பயிற்சி மையத்தின் மூலம் கரூர் மாவட்டத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது. க.பரமத்தி வட்டாரம் டி.வெங்கடாபுரம் கிராமத்தில் நடைபெற்ற தோட்டக்கலை விவசாயிகள் தொழில்நுட்ப பயிற்சியை மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குனர் சதாசிவம் துவக்கினார். 50 தோட்டக்கலை விவசாயிகள் பயிற்சியில் கலந்து கொண்டனர். தோட்டக்கலை பயிர்களின் புதிய சாகுபடி தொழில்நுட்ப உத்திகளை விளக்கினார். வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் (பொ) சொர்ணமாணிக்கம் மூலிகை பயிர்களின் சாகுபடி தொழில் நுட்பங்களை விளக்கினார். சொட்டு நீர்ப்பாசனம் அமைப்பதற்கான வழிமுறைகள், சொட்டுநீர்ப் பாசன கருவிகளால் பராமரிக்கும் முறைகள், குறித்தும் ஜெயின் இர்ரிகேஷன்ஸ் நிறுவன பிரதிநிதி செந்தில்குமார் விளக்கினார். தென்னையில் கோகா பயிரை ஊடுபயிராக சாகுபடி செய்து கூடுதல் லாபம் பெற்று பயனடையுமாறு கேட்பரிஸ் நிறுவன பிரதிநிதி கல்யாணராஜன் கூறினார். தோட்டக்கலைத்துறை மூலம் செயல்படுத்தப்படும் மத்திய, மாநில அரசின் திட்டப்பயன்களை அடைவதற்கான வழிமுறைகளை வெற்றிவேல் விளக்கினார். பயிர் காப்பீட்டு திட்டத்தின் பலன்கள், பயனடைவதற்கான வழிமுறைகளை உதவி வேளாண்மை அலுவலர் சரவணன் எடுத்துக் கூறினார். 2ம்நாள் பயிற்சியில் கலந்து கொண்ட தோட்டக் கலை விவசாயிகள் தாந்தோணி வட்டாரம் வெள்ளியணை கிராமத்திற்கு வயல்வெளி பயிற்சிக்காக அழைத்து செல்லப்பட்டனர். அங்கு முன்னோடி விவசாயிகள் வயலில் நடைபெற்ற வயல்வெளி பயிற்சியில் தாந்தோணி வட்டார துணை அலுவலர் ஜானகி சொட்டுநீர் பாசனக் கருவிகளை பராமரிப்பது குறித்து விளக்கி கூறினார்.

## வெயில் காரணமாக உழவர்சந்தையில் காய்கறி விலை உயர்வு

கரூர், : கடும் வெயில் காரணமாக உழவர்சந்தையில் காய்கறி விலை உயர்ந்துள்ளது.

கரூர் உழவர்சந்தையில் கடந்த 10 நாட்களுக்கு முன் இருந்ததைவிட தற்போது காய்கறிகள் விலை

உயர்ந்துள்ளது. கரூர் உழவர்சந்தையில் நேற்று சின்னவெங்காயம் ரூ.28ஆகவும், பல்லாரி வெங்காயம் ரூ.20 ஆக குறைந்தது. அதேவேளையில் கடைகளில் வெங்காயம் விலை ரூ.40வரை விற்பனை செய்யப்பட்டது. பல்லாரி ரூ.30க்கு விற்பனையாகிறது. வெண்டைக்காய் கிலோ ரூ,26ஆக அதிகரித்துள்ளது. இஞ்சி கிலோ ரூ.70ஆகிவிட்டது. கடைகளில்ரூ.90 முதல் 100வரை விற்பனை செய்யப்படுகிறது. உழவர்சந்தையில் கீரை கட்டு ரூ.2.50க்கு கடந்த மாதம் விற்பனையானது. கடும் வெயில் காரணமாக விளைச்சல் பாதிக்கப்பட்டதால் ரூ.5ஆக உயர்ந்துவிட்டது. அகத்திக்கீரை, மணத்தக்காளி கீரை ஆகியவை ரூ.4க்கு விற்பனை செய்யப்பட்டது. தக்காளி நேற்று ரூ.6க்கு விற்கப்பட்டது. அவரைக்காய் விலை உயர்ந்து ரூ.45க்குக்கும், ரஸ்தாளி பழம் ஒரு டஜன் ரூ.36க்கு விற்றது.

### பூக்கள் சாகுபடி, தேனீ வளர்ப்பு பயிற்சி முகாம் பெண் விவசாயிகள்

பங்கேற்புதோகைமலை, : நபார்டு வங்கி மற்றும் சிநேகிதி தொண்டு நிறுவனம் சார்பில் பெண் விவசாயிகளுக்கான பூக்கள் சாகுபடி மற்றும் தேனீ வளர்ப்பு பற்றிய 6 நாள் பயிற்சி சேப்ளாப்பட்டியில் நடைபெற்றது.

சேப்ளாப்பட்டி, முதலைப்பட்டி பகுதியில் சுமார் 200 ஏக்கர் பரப்பளவில் பல்வேறு வகையான பூக்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இதில் விவசாயிகள் உரிய தொழில்நுட்பத்தை கடைபிடித்து அதிக அளவில் பூக்கள் மகசூல் பெறவும், பூக்கள் மூலம் மதிப்பூட்டப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்து அதிக லாபம் அடையவும் நபார்டு வங்கி உதவியுடன் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி முகாமை மாவட்ட நபார்டு வங்கி உதவி மேலாளர் பார்த்திபன் துவக்கி வைத்தார். பூக்கள் சாகுபடி, உயிரிதொழில்நுட்பத்தின் மூலம் 12 மாதங்களும் சாகுபடி செய்யும் வழிமுறைகள், மண் மேலாண்மை, நீர் மேலாண்மை, மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் முறையே பொக்கே, வாசனை திரவியங்கள் தயாரிப்பு, பூக்கள் மூலம் தேன்வளர்ப்பு குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. காதிகிராம தொழில்நுட்ப நிறுவன முன்னாள் அதிகாரி வில்சன், சரஸ்வதி வேளாண் அறிவியல் மையம் தோட்டக்கலைத்துறை தொழில்நுட்ப வல்லுநர் தனசேகர், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் டாக்டர் திரவியம், தொழில்நுட்ப உதவியாளர் கருப்பசாமி, நபார்டு உழவர்மன்ற நிர்வாகிகள் முதலைப்பட்டி அர்ஜூனன், நெய்தலூர் செல்லமுத்து, கண்ணதாசன், முன்னோடி விவசாயிகள் கோவிந்தராஜூ, சந்திரா, நாபின் நிதியகம் திட்ட மேலாளர் வடிவேல், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கோமளா, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் சத்தியா உள்ளிட்டோர் பயிற்சி அளித்தனர். 6 நாள் நடந்த பயிற்சியில் 30 பெண் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## சின்னதாராபுரத்தில் இலவச ஆடுகளுக்கு தடுப்பூசி முகாம்

க.பரமத்தி, : கூடலூர் கிழக்கு ஊராட்சிக்கு வழங்கப்பட்ட ஆடுகளுக்கு இலவச ஆட்டுக்கொல்லி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற்றது.

க.பரமத்தி ஒன்றியத்திற்குட்பட்ட சின்னதாராபுரம் கால்நடை மருந்தகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற முகாமிற்கு கூடலூர் கிழக்கு ஊராட்சி தலைவர் புஷ்பவதி தலைமை வகித்தார். ஒன்றியகுழு உறுப்பினர் செந்தில் துவக்கி வைத்தார். சின்னதாராபுரம் கால்நடை உதவி மருத்துவர் மோகன்ராஜ் பேசுகையில், ஆடுகளுக்கு தடுப்பூசி போடுவது அவசியமாகும், ஆட்டுக்கொல்லிநோய் தடுப்பூசி போடுவதன் மூலம் ஆடுவளர்ப்போர் பொருளாதார இழப்பை தடுக்க முடியும். தடுப்பூசிகளை தவறாமல் போட வேண்டும். மேலும் வெள்ளாடுகளை எளிதில் டெட்டனஸ் என்னும் ரணஜன்னி தாக்க வாய்ப்புள்ளதால் காயம் ஏற்படும் போதும, குட்டி ஈனும் முன்பும் டெட்டனஸ் தடுப்பூசி போட வேண்டும். 3 முதல் 4 மாதங்களுக்கு ஓரு முறை குடற்புழு நீக்கம் செய்வதும், மழைகாலங்களில் இளம்புற்களை மேய்வதற்கு முன் துள்ளுமாரி நோய் தடுப்பூசி 6 மாதங்களுக்கு ஒரு முறை போடுவது அவசியம் என்றார். கால்நடை உதவிமருத்துவர் மோகன்ராஜ், எலவனூர் கால்நடை ஆய்வாளர் மணி, முடிகணம் கால்நடை ஆய்வாளர் சக்திவேல் ஆகியோர் கொண்ட குழுவினர் 550 ஆடுகளுக்கு ஆட்டுக்கொல்லி நோய் தடுப்பூசி போட்டனர்.

## நிவாரணம் கோரி விவசாய சங்கம் தெருமுனை பிரசாரம்

பொன்னமராவதி,: பொன்னமராவதி அருகே உள்ள காரையூரில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள், விவசாய தொழிலாளர்களுக்கு தமிழக அரசு நிவாரணம் வழங்கக்கோரி தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், அகில இந்திய விவசாய தொழிலாளர்கள் சங்கம் சார்பில் தெருமுனைப் பிரசாரம் நடந்தது. விவசாய சங்க தாலுகா தலைவர் ராம சாமி தலைமை வகித்தார். விவசாய தொழிலாளர் சங்க தாலுகா செயலாளர் பிரதாப்சிங் முன்னிலை வகித் தார். விவசாய சங்கத் தலை வர் மாவட்டத் தலைவர் செபஸ்தியான், விவசாய தொழி லாளர் சங்க தாலுகா செயலாளர் தாமரைசெல்வன், துணைச் செய லாளர் திருமூர்த்திசெல்வன், பொருளாளர்கள் சவுந்தரராசன், சோலையப்பன், நிர்வாகிகள் நாவலன், மாயழகு, முத்துக்கோனார், அழகப்பன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## பாரம்பரிய உணவு, தானிய உற்பத்தி செய்தால் வருங்கால சமுதாயத்தை நோயற்றவர்களாக மாற்ற முடியும் இயற்கை வேளாண் விஞ்ஞானி பேச்சு

புதுக்கோட்டை,: பாரம்பரிய உணவு, தானிய, பயறு வகைகளை பயிரிட்டு பயன்பாட்டுக்கு மக்களிடம் கொண்டு செல் வதன் மூலம் வருங்கால சமுதாயத்தை நோயற்ற

ஆரோக்கியமானவர்களாக மாற்ற முடியும் என புதுக்கோட்டையில் நடைபெற்ற கருத்தரங்கில் இயற்கை வேளாண்மை விஞ்ஞானி நம்மாழ்வார் பேசினார்.

புதுக்கோட்டையில் நேற்று நபார்டு, ரோஸ் தொண்டு நிறுவனம் இணைந்து நடத்திய உழவர் மன்ற உறுப்பினர்களுக்கு பாரம்பரிய நெல் ரகங்கள், சிறுதானியம் குறித்த மாவட்ட அளவிலான கருத்தரங்கம் நடைபெற்றது. இவ்விழாவிற்கு நபார்டு வங்கி துணை பொது மேலாளர் ஆனந்த் தலைமை வகித்தார். விழாவில் இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு கண்காட்சி மற்றும் பாரம்பரிய உணவுத் திருவிழாவை தொடக்கி வைத்து பேசியதாவது: பொதுவாக விவசாயத்துக்கு நெல்லின் வருவாய் மட்டுமே கணக்கிடப்படுகிறது. வைக்கோல் மதிப்பை சேர்ப்பதில்லை. கால்நடைகளின் முக்கியமான உணவாதாரம் வைக்கோல்தான். ஆனால், தற்போதுள்ள நவீன குட்டை நெல் ரகங்களால் வைக்கோலும் கிடைப்பதில்லை. வறட்சியையும் தாங்குவதில்லை. இதனால் விவசாயிகளுக்கும் தாங்க முடியாத சுமை ஏற்படுகிறது என்ற நிலை மறுபக்கம் நீடிக்கிறது.

இதை மாற்றும் வலிமை பாரம்பரிய இயற்கை வேளாண்மைக்கு மட்டுமே உள்ளது என்பது தற்போது நிரூபிக்கப்பட்டு வருகிறது. இந்த வேளாண்மையைப் புறக்கணிப்பது தொடருமானால் அரிசி கிடைக்காத நிலை வரும். உணவுக்கு உத்தரவாதம், ஊட்டச்சத்து உள்ள இயற்கை வேளாண் மையை புறக்கணித்தால் வரப்போகிற ஆபத்தை அரசு உணரவில்லை என எண்ணத் தோன்றுகிறது.

பாரம்பரிய நெல் ரகம், பாரம்பரிய தானிய வகைகள் பயன்பாட்டில் இருந்த காலம் வரை மக்களுக்கு நோய் எதிர்ப்பு சக்திக்கான ஊட்டச்சத்து கிடைத்து வந்தது. நோய்களும் குறைவாகவே இருந்தது. ஆனால், இன்றைய அவசர உலகில், பாரம்பரிய உணவு வகைகள் மறைந்து போய், நார்ச்சத்து இல்லாத துரித உணவுக்கு மக்கள் மாறிவிட்டதால் நோய்கள் அதிகரித்துவிட்டது.எனவே இந்த நிலையை மாற்ற விவசாயிகள்தான் அதற்கு மாற்றாக திகழ வேண்டும். பாரம்பரிய உணவு, தானிய, பயறு வகைகளை பயிரிட்டு பயன்பாட்டுக்கு மக்களிடம் கொண்டு செல் வதன் மூலம் வருங்கால சமுதாயத்தை நோயற்ற ஆரோக்கியமானவர்களாக மாற்ற முடியும் என்றார்.நிகழ்ச்சியில் திருமங்கலம் பாமயன், மாவட்ட வழங்கல் விற்பனை சங்க மேலாளர் சத்தியசீலன், இயற்கை விவசாயிகள் தனபதி, அப்பாவுபாலாண்டார், மரம்தங்கசாமி, அகிலா, ஞானபிரகாசம், வீராண்டான், பொன். சுந்தரேசன், ஜீவானந்தம், அன்பழகன், ரகுபதி, காமராசு உள்பட பலர் கலந்து கொண்டனர். முன்னதாக ரோஸ் தொண்டு நிறுவன இயக்குநர் ஆதப்பன் வரவேற்றார். முடிவில் நிர்வாகி விஜயா நன்றி கூறினார்.

### பழம், காய்கறியை விட காளானில் புரதச்சத்து அதிகம் வேளாண் அதிகாரி தகவல்

நாகை, : பழம், காய்கறியை விட காளானில் அதிக புரதச்சத்து உள்ளது என்று வேளாண் தொழில்நுட்ப வல்லுனர் வெங்கடாசலம் தெரிவித்தார்.

நாகையில் உணவு காளான் உற்பத்தி தொழில்நுட்பங்கள் குறித்த ஒரு நாள் பயிற்சி முகாம்

நடந்தது. முகாமை துவக்கி வைத்து வேளாண் தொழில்நுட்ப வல்லுனர் வெங்கடாசலம் பேசியதாவது: நாளுக்குநாள் பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப புரதச்சத்து மிகுந்த உணவு தேவையை நிவர்த்தி செய்வதில் காளான் பெரும்பங்கு வகிக்கிறது. உலர்ந்த காளானில் 20 முதல் 30 சதம் அளவிற்கு புரதச்சத்து உள்ளது. இது காய்கறி, பழங்களில் உள்ள புரதச்சத்தைவிட அதிகமாகும். மேலும் இதில் லைசின், ட்ரிப்டோபேன் போன்ற அமினோ அமிலங்களும், பி மற்றும் சி வைட்டமின்களும் அதிகளவில் காணப்படுகிறது. தமிழ்நாட்டில் மொட்டு காளான், சிப்பிக்காளான் வகைகள் அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகிறது.

காளான் வளர்ப்பு, கிராம மக்களின் குறிப்பாக பண்ணை மகளிர், மகளிர் சுய உதவிக்குழு போன்றோரின் நேரத்தை பயனுள்ளதாக மாற்றி நல்ல வருமானத்தை ஈட்டி கொடுத்து மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த உதவுகிறது. மேலும் காளான் கழிவு, மண்புழு உரம், தயாரிக்கவும், காளானிலிருந்து மதிப்பு கூட்டுப்பொருளாக காளான் ஊறுகாய், சூப்பு பொடி, வடகம் போன்ற பொருட்களை தயாரித்து வருமானம் ஈட்ட முடியும். இவ்வாறு அவர் பேசினார்.

முகாமில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## காரைக்கால் விவசாயிகளுக்கு ஓரிரு நாளில் வறட்சி நிவாரணம் வழங்கப்படும் புதுச்சேரி

## வேளாண் அமைச்சர் சந்திரகாசு தகவல்

காரைக்கால், : வறட்சியால் பாதிக்கப்பட்ட காரைக்கால் மாவட்ட விவசாயிகளுக்கு இன்னும் ஓரிரு நாளில் முதல்வர் அறிவித்தப்படி வறட்சி நிவாரணம் வழங்கப்படும் என்று புதுச் சேரி வேளாண் அமைச்சர் சந்திரகாசு தெரிவித்துள்ளார்.

காரைக்கால் கோட்டுச் சேரி தூய சகாய அன்னை சமுதாய கூடத்தில் மாவட்ட குடிமைப்பொருள் வழங்கல்துறை சார்பில் உலக நுகர்வோர் தினவிழா கொண்டாடப்பட்டது. புதுச்சேரி வேளாண் அமைச்சர் சந்திரகாசு தலை மை வகித்தார். குடிமைப்பொருள் வழங்கல்துறை துணை இயக்குனர் நாகராஜன் முன்னிலை வகித்தார். விழாவை துவக்கி வைத்து அமைச்சர் சந்திரகாசு பேசியதாவது: என்.ஆர் காங்கிரஸ் முதல் வர் ரங்கசாமி தலைமையி லான இந்த அரசு புதுச்சேரி, காரைக்கால் மக்கள் என பிரித்து பார்க்காமல் மக்கள் நலத்திட்டங்களை சிறப்பாக செய்து வருகிறது. குறிப்பாக காரைக்கால் மாவட்ட மக்களுக்காக இங்குள்ள 5 எம்எல்ஏக்களின் கருத்துகளுக்கு மதிப்பு கொடுத்து அவர்கள் கேட்கும் வளர்ச்சி நிதிகளை முதல்வர் தாராளமாக வழங்கி வருகிறார். மழை, காவிரி நீர் இல்லாமல் பொய்த்துபோன காரைக் கால் மாவட்ட விவசாயிகள் நலன்கருதி ஹெக்டேருக்கு ரூ.20 ஆயிரம் நிவாரணம் அறிவித்துள்ளார். அந்த நிவாரணம் இன்னும் ஓரிரு நாளில் முதல்வர் அறிவித்தப்படி வழங்கப்படும் என்றார்.பின்னர் தரமான பொருளும், நிறைவான சே வையும் மக்களை சென்ற டைய பெரிதும் தேவைப்படுவது நுகர்வோர் விழிப்புணர்வா அல்லது சட்டத்தின் கண்காணிப்பா என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது. இதில் கவிஞர்

நந்தலாலா தலைமையில் வாசுகி ஜெயராமன், முனை வர் காளிதாஸ், வைஜெயந்திராஜன், ஆனந்தகிருஷ்ணன் ஆகியோர் வாதிட்டனர். விழாவில் நுகர் வோர் சங்கங்களை சேர்ந்த நல்லுசாமி, பாரிஸ்ரவி, பக்கிரிசாமி உள்ளிட்ட பலர் கலந்து கொன்டனர். குடிமைப்பொருள் அதிகாரி ராஜாமதிவர்மா நன்றி கூறினார்.

### எரிமலைகள் எவ்வாறு உருவாகின்றன என்பது உங்களுக்கு தெரியுமா?....

நிலத்தின் அடியில் கீழே போகப்போக வெப்பநிலை அதிகரிக்கிறது. நிலத்தின் மேல் மட்டத்தில் இருந்து 30 கிலோமீட்டருக்கு அடியில் செல்லும் போது அங்கு இருக்கும் வெப்பம் சாதாரண பாறைகளை கூட உருக்கும் அளவில் இருக்கும். இவ்வாறு நிலத்தின் அடியில் உள்ள பாறைகள் உருகும்போது அவை விரிவடைகின்றன. திரவ உருவான இப்பாறைகளை மாக்னா என்கிறார்கள். இவ்வாறு வெப்பநிலை காரணமாக உருவாகும் மாக்னா எனப்படும் பாறைக்குழம்பு ஒரு கட்டத்திற்கு மேல் நிலத்தின் அடியில் ஏற்படும் இடநெருக்கடி காரணமாக இருந்து உண்டாகும் அளவிடற்கரிய வெப்பம் நிலத்தை பீறிட்டு வெளிவருவதற்காக அலைமோதுகிறது. அப்போது பூமியில் எப்பகுதியாவது வலிமை குன்றியிருந்தால் அப்பகுதி பிளந்து அதிலிருந்து உஷ்ணவாயுக்களும், திரவ உருவான பாறைகளும், பாறைத்துகள்களும் வெளிக்கிளம்புகின்றன. இதைத்தான் எரிமலை வெடித்தல் என்கிறோம். பீறிட்டு வரும் புகையும், சாம்பலும் கல் துண்டுக ளும் சேர்ந்து லாவா எனப்படும் குழம்பாகின்றன. குளிர்ச்சியடையும்போது மலையுருக்கொள்கிறது. உள்ளுக்குள்ளே உருகிய பொருட்கள் அனைத்தும் வெளி வரும் வரையில் தீயும், புகையும் தொடர்ந்து வழிந்து கொண்டேஇருக்கின்றன. லாவா நின்றுவிட்டால் அதனை இறந்த எரிமலை என்கிறார்கள். தற்சமயம் உலகத்தில் 450 எரிமலைகள் உள்ளன. இந்தியாவில் எரிமலைகள் மிகப்பெரியவை. மிகவும் உயரமான எரிமலை அர்ஜென்டினாவில் உள்ளது. இதன் உயரம் 22 ஆயி ரத்து 834 மீட்டர். அதாவது 60, 960 அடி.

### சின்னமனூர் பகுதியில் 300 ஏக்கரில் 2ம் போக நெல் அறுவடை பணிகள் தீவிரம்

சின்னமனூர், : சின்னமனூர் பகுதியில் 300 ஏக்கரில் இரண்டாம்போக நெல் அறுவடைப்பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது.

சின்னமனூர் மற்றும் அதனை சுற்றியுள்ள குச்சனூர், மார்க்கயன்கோட்டை, வேம்படிகளம், சீலையம்பட்டி முத்துலாபுரம் விலக்கு உள்ளிட்ட இடங்களில் முல்லைபெரியாற்றின் பாசனத்தை பயன்படுத்தி வருடத்தில் இருபோக நெல் விவசாயம் நடக்கிறது. பருவமழை பெய்யாததால் நீர்பிடிப்பு பகுதிகளில் தண்ணீர் தேக்கம் குறைவாக இருந்தது. அணையில் தண்ணீர் தாமதமாக திறக்கப்பட்டது. இதனால் கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் 15 ஆயிரம் ஏக்கரில் 4 ஆயிரம் ஏக்கர் மட்டுமேதான் முதல் போகம் நடவு செய்து அறுவடை செய்யப்பட்டது.

திடீரென பெய்த மழையால் அணையில் நீர்மட்டம் உயர்ந்தது. அணையில் திறக்கப்பட்ட நீரால்

குளம் கண்மாய்களுக்கு நீர்வரத்து அதிகரித்தது. இதையடுத்து, இரண்டாம் போகத்திற்காக பரவலாக நெல் நடவு பணி துவங்கியது. சின்னமனூர் பகுதியில் 4 ஆயிரம் ஏக்கரில் 3 ஆயிரத்து 700 ஏக்கர் வரையில் அறுவடை முடிந்து விட்டது. 300 ஏக்கரில் மட்டும் நெல் வளர்ச்சி இருந்ததால் அறுவடைக்கு தாமதமானது.

நெல்மணிகள் தற்போது அறுவடைக்கு தயாரானதால் சில நாட்களாக அறுவடை பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. ஒரு ஏக்கருக்கு சாதாரணமாக 60 மூடைகள் கிடைக்கும். ஆனால், தற்போது 38 லிருந்து 40 மூடைகள் மட்டுமே கிடைக்கிறது. 61 கிலோ கொண்ட நெல் மூடை ரூ.900 என விலை போகிறது. கடந்த ஆண்டு ரூ. ஆயிரத்திற்கு விலை போனது. சின்னமனூர் மார்க்கயன்கோட்டை பகுதியில் 2 நாட்களில் முற்றிலும் நெல் அறுவடை பணிகள் முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது

## மாட்டுத்தீவனம் உற்பத்திக்கு மானிய நிதியுதவி விநியோகம்

தளவாய்புரம் : தளவாய்புரம் அருகே 7 கிராம விவசாயிகளுக்கு மாட்டுத்தீவனம் வளர்க்க அரசின் மானிய நிதியுதவி விநி யோகம் செய்யப்பட்டது.

தளவாய்புரம் அருகே மீனாட்சிபுரம், தெற்கு மீனாட்சிபுரம் உள்பட 7 கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் 30 பேர், தமிழ்நாடு தீவன அபிவிருத்தி திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்களின் வயல்களில் கறவை மாட்டு தீவனம் வளர்ப்பதற்கு முழு மானியத்துடன் கடந்த மாதம் விதைகள் வழங்கப்பட்டன. அதனை விவசாயிகள் வளர்ப்பதற்கு ஏக்கருக்கு ரூ.5 ஆயிரத்து 200 வீதம் வழங்கப்படுகிறது.

இதற்கான காசோலை விநியோகம், மீனாட்சிபுரம் ஊராட்சி அலுவலகத்தில் ஊராட்சி தலைவர் கதிரேசன் தலைமையில் நடைபெற்றது. துணைத்தலைவர் மனோரஞ்சிதம் முன்னிலை வகித்தார். கால்நடை உதவி மருத்துவர் பிரபாகரன் வரவேற்றார். எம்எல்ஏ கோபால்சாமி 30 பேருக்கும் மானியத்திற்கான காசோலையை வழங்கி பேசினார். ஒன்றிய கவுன்சிலர்கள் பெரியாண்டவர், பொன்னுலட்சுமி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.